தை — மாசி
1981

# புதிய உலகம்



உள்ளே :

- ▶ இலங்கைத் தமிழர் வரலாறு
  — கலாநிதி பத்மநாதன்
- ▶ தமிழாராய்ச்சி மாநாடுபற்றி ....
  — அருட்திரு கி. யெபநேசன்
- ▶ அமெரிக்க அனுபவங்கள்
  — கரவையூர்ச் செல்வம்

ஐந்தாவது ஆண்டு
மலர் – 25
தை — மாசி 1981

பொறுப்பாசிரியர் :
ஜே. நீக்கிலஸ்

துணை ஆசிரியர் :
நாவண்ணன்

விநியோகப் பொறுப்பாளர் :
பிரான்சிஸ் டானியேல்

வெளியீடு :
கிங்ஸ்லி சுவாம்பிள்ளை

தொடர்பு :
"புதிய உலகம்,"
த. பெ. எண் 2,
யாழ்ப்பாணம்.

"PUTHIYA ULAGAM"
P. O. Box 2,
Jaffna.

விலை ரூபா 1-50 ஆண்டுச் சந். 10-00

சிந்தனையூட்டும் சஞ்சிகை

# புதிய உலகிலே...

பக்கம்

எமது பார்வை ... 1
தமிழர் திருநாள் ...... 3
மறை இயல் ... 5
உண்மைப் பொங்கல் ... 6
பகிரங்க லஞ்சம் ... 7
சிறுவர் உலகு ... 9
பொங்குக இனிதே பொங்கலுமே ... 13
பாவம், அவனைத் தூங்கவிடுங்கள் ... 14
அமெரிக்க அனுபவங்கள் ...... 19
அம்மா பசிக்குதே ... 25
இலங். தமிழர் வரலாறு ... 29
5-வது தமிழாராய்ச்சி ... 34
அரங்கம் ஏட்டின் ... 41
பட்டமளிப்பு ... 42
இவர்களுக்கும் பொய்கலா 44
புதுமைப் பதில் ... 46
உங்கள் பார்வை ... 48

படைப்புகளுக்குப் பொறுப்பு படைத்தவர்களே
கருத்துகளுக்கு உரியவர்கள் உரைத்தவர்களே ஆ—ர்

( FOR PRIVATE CIRCULATION ONLY )

# எமது பார்வை

## பொங்கலோ பொங்கல் !

காலத்தின் சக்கரத்திலே விழாக்கள் மாறி மாறி வந்து கொண்டே இருக்கின்றன.

காலையில் தோன்றும் கதிரவன் மாலையில் மறைவது போன்று விழாக்களும் தோன்றி மறைகின்றன.

எல்லா விழாக்களும் சமய சமூக அம்சங்களை அடக்கியுள்ளன.

தமிழர் கொண்டாடும் **தைப்பொங்கல்** விழாவும் இவ்விரு அம்சங்களையும் கொண்டதாகக் காட்சியளிக்கின்றது, உழவர்கள் ஒன்று கூடிக் கொண்டாடும் **அறுவடை விழா** இறைவனுக்கு நன்றி கூறும் விழாவாக அமைவது சாலச் சிறந்தது.

## வானம் பொய்த்தாலும் பொங்கலா ?

ஏக்கத்தோடு வானத்தைப் பார்த்து ஏமாந்திருக்கும் இந் நாட்களில், அறுவடையென்று சொல்லி ஆறுதலடைய முடியாமல் அல்லல்படும் இவ்வேளையில் பொங்கல் விழா எதற்கு என்றகேள்விஎழத்தான்செய்கின்றது.வெளிநாட்டுப்பொருட்கள் எல்லாம் பொங்கிவரும் கடல் அலையைப் போன்று நம் நாட்டில் வந்து குவிய, அவற்றின் விலைகள் மலையாக உயர்ந்துபோக விழாக்கள் கொண்டாடுவது எப்படி ? விழாக்கள் என்றால் வீண் செலவுகள் அல்ல.......... பொங்கல் விழா என்றால் அது ஒரு நன்றி விழா.

## உழவர்களுக்கு மட்டும்தானு பொங்கல்

இல்லை ! இல்லை!! உழைக்கின்ற அனைவருக்குமே உரித் தானது நம் பொங்கல் விழா. உழைப்பின் பயன்களை அல்லது முதற் கனியை இறைவனுக்கு காணிக்கையாக வைக்கும் நன்றி விழாவே பொங்கல் விழா. உலகம் வாழ உழவர்கள் தேவை. உழவர்கள் வாழ உலகம் தேவை. இவ்வித உறவில்தான் நாம் வாழ வேண்டும். வாழ முடியும். அவ்விதமே பொங்கல் அனைவருக்கும் உரியதொரு விழாவாகும்,

## நன்று கூறுவோம் இறைவனுக்கு

இன்பத்திலே மட்டும் இறைவனை நினைந்து துன்பத்திலே அவனைத் தூற்றுவது மனிதப் பண்பல்ல. அதுவும் இறைப் பற்றிலே ஊறி, தவறுது தினமும் தெய்வத்தை வணங்கி நிற் கும் தமிழன் செய்யத்தக்க தொன்றல்ல. இறைவன் தந்ததை இன்முகத்தோடு ஏற்று உள்ளதைக் கொண்டு திருப்தி காண் பதே எமது பண்பாகும்,

## பண்பாட்டில் வளருவோம்

தமிழனின் தனிப்பெரும் பண்பினை வெளிப்படுத்தும் விழாக்களில் பொங்கல் விழா முதலிடம் வகிக்கின்றது. விழாக் கோலங்கள் கொண்டு ஆடம்பரமாய்க் கொண்டாடுவது மட்டு மல்ல பொங்கல் விழா — மாருக பண்டைக் காலத்திலிருந்தே தமிழன் ஊறித்திழைத்த வீரம், விருந்தோம்பல், காதல், பண்பாடு என்ற பொருள் பொதிந்த வாழ்க்கை நெறியில் புத்துயிரும் புதுமெருகும் பெற்று வையத்தில் வாழ்வாங்கு வாழ்வோம், வளருவோம், வழிகாட்டுவோம்.

## வாழ்த்துகின்ருேம்

எமது வாசக நேயர் அனைவருக்கும் இதயம் நிறைந்த பொங்கல் வாழ்த்துக்களைச் சமர்ப்பிக்கின்ருேம்.

ஜே. நீக்கிலஸ்.

# தமிழர் திருநாள்



உயிலூர், ஏ. பீற்றர்ராஜன்

ஏரினைப் பூட்டி பாரினை உழுது
நீரினைப் பாச்சி நெல்லினை விதைத்து
பயிரினைக் காத்து பணிபல புரிந்து
அறுவடை செய்து அவனிக்கு மளித்து
மனையினில் சென்று மனைவி மக்களுடன்
உண்டு மகிழ்ந்திடும் உழவன் திருநாளாம்

ஏரினை இழுத்திடும் எருது மாடுகட்கும்
பொலி விளைவளித்திடும் பூமா தேவிக்கும்
நலம்பல கூறி நன்றி நவின்றிட
புத்தாடை யணிந்து பட்டாசு கொழுத்தி
புதிய பானையிலே பொங்கலும் பொங்கி
புவியினில் மகிழ்ந்திடும் பொங்கல் திருநாளாம்

பலகுடை மன்னரும் பணிந்து வாழவும்
பாரினில் பல்தொழில் செய்வோர் வாழவும்
வேதம் ஓதிடும் வேதியர் வாழவும்
சாத மளித்து தரணியைக் காத்திடும்
பருவங்கள் மாறினும் பண்பாடு மாறாத
தமிழர் திருநாளாம் தைத் திருநாள்




# பொங்கல் விழா

## கிறிஸ்தவத்திலும் ஒரு நன்றி விழா

பொங்கல் விழாவை நாம் ''அறுவடை விழா'' என்று அழைக்கலாம். இவ்விழா தமிழர்களின் உள்ளத்தில் உவகை கொள்ளும் ஓர் இன்ப விழா. ஆண்டவனுக்கு நன்றிகூறும் நன்றியின் விழா. உழவர்கள் மட்டுமன்றி, எல்லா உழைப்பாளிகளுமே கொண்டாடும் நன்றிப் பெருவிழா. நிலத்தில் விளைந்த முதற்கனிகளை நிறைவுடன் தந்த நம் இறைவனுக்கு நன்றிப்படைப்பாக, காணிக்கையாக, அன்பளிப்பாக அர்ப்பணிக்கும் விழா. தமிழ் மக்கள் ''பொங்கலோ பொங்கல்'' என்றுகூறிக் குதூகலம் கொள்ளும் மகிழ்ச்சி விழா.

நிலத்தைப் பண்படுத்தி விதை விதைக்கிறான் உழவன். கார் மழை பெய்து பயிர்கள் செழிப்புற்று வளர்ந்து பன்மடங்காகப் பலன் தருகின்றன. இதனைக் கண்ட உழவன் மகிழ்ச்சி அடைகின்றான். இறைவன் தனக்களித்த இன்பத்தை உணர்ந்து கொள்ளுகிறான். இறைவன் அன்புள்ளம் கொண்டவர். உழைப்புக்கேற்ற பலனை அள்ளித் தரும் அருங்கொடை வள்ளல் என்பதைப் புரிந்து கொள்ளுகின்றான்.

அறுவடைகாலம் வருகின்றது. மகிழ்வுடன் பயிர்களை அறுவடை செய்து, முதன் முதலாக இறைவன் தனக்குக் கொடுத்த பலனுக்கு நன்றியாகப் பலனைத் தான் முதலில் அனுபவிக்காது, இறைவனுக்குப் படைக்கின்றான். அந்த ஆண்டவனின் பாதத்தில் வைத்து நன்றிகூறி அஞ்சலி செய்கின்றான். அத்தோடு அவனுடைய மகிழ்ச்சி நின்றுவிடவில்லை. புதிய தானியங்களை அரிசியாக்கி அதனைப் பொங்கலாக மாற்றி அந்தப் பொங்கலையும் படைத்தவனுக்குப் படைக்கிறான். தன்னுடைய சுற்றத்தாரோடு இன, மத, மொழி வேறுபாடின்றி உண்டு மகிழ்கின்றான்.

ஏன்? உழவன் மட்டுந்தானா இந்தப் பொங்கல் விழாவைக் கொண்டாடவேண்டும்? தொழிற்சாலையில் வேலை செய்பவனாக இருந்தால் என்ன, அலுவலகங்களிலே வேலை செய்பவனாக இருந்தால் என்ன, ஆசிரியனாக இருந்தால் என்ன, மாணவனாக இருந்தால் என்ன, நாட்டுக்கும் சமூகத்துக்கும் உழைக்கும் சமுகத் தொண்டர்களாக இருந்தால் என்ன அனைவருமே உழைப்பாளிகள் தான். இவர்களும் தங்கள் உழைப்பின் பலனை ரசித்துப் பார்ப்பவர்கள்தான். இவர்களுக்கும் அவர்களுடைய உழைப்புக்கேற்ற பலனை அளிப்பது, அந்த உழவனுக்குக் கருணைகாட்டுகின்ற இறைவனே தான். ஆகவே, உழைப்பாளிகள் அனைவரும் இந்தப் பொங்கல் விழாவை, அறுவடை விழாவைக் கொண்டாட வேண்டும்.

கிறிஸ்துவின் வாழ்விலும் நாம் அறுவடை விழாவைக் காணலாம். ''படைப்புக்கள் அனைத்துக்குமே தலைப்பேறாக, முதற்கனியாக இருக்கின்றார் (கொ. 1 : 15).'' மரியாளுக்குத் தலைப்பேறான மகனாகப் பிறந்தார் கிறிஸ்து. பழைய ஏற்பாட்டின்படி, முதற்கனிகளை இறைவனுக்கு ஒப்புக்கொடுப்பது யூதர்களின் வழக்கம். இவ்வாறே கிறிஸ்துவையும் மரியாள் இறைவனுக்குக் காணிக்கையாகக் கொடுக்கிறாள் (லூக். 2 : 23). இன்னும் கிறிஸ்து தன்னுடைய வாழ்வை மீட்புப்பணியில் முதற்கனியாக, முதல் படைப்பாகப் பிதாவுக்குக் கையளிக்கின்றார். மனிதனுக்கு ஒருநாள் உயிர்ப்பு உண்டு என்பதையும், தான் முதல் முதலாக உயிர்த்தெழுந்து நமக்குக் காட்டியுள்ளார் (1கொ. 15 : 20). அதனால்தான் நாம் உயிர்த்த ஞாயிறை ''முதற்கனியின் நாள்'' என்று அழைக்கின்றோம். இன்னும் நம்மைக் கூட திருமுழுக்கு வழியாக இறைவனின் முதற்கனிகளாக மாற்றியுள்ளார். ஆகவே நாமும் இறைவனுக்கு நம்மையே முதற்கனிகளாக மீண்டும் படைப்போம். நம்மில் இறைவனின் செயல் அதிக பலனைத்தர அந்த அன்பு நிறை ஆண்டவனையே வேண்டுவோம். நமது தொழில்களை ஆசீர்வதிக்க அவரையே வேண்டுவோம்.

எழுதியவர் :

**R. W. E. B.**

---

வாழ்க்கை ஒரு சீட்டாட்டம். வெளியில் இருந்து பார்த்தால் எல்லோரும் முன்யோசனை இல்லாமல் ஆடுவதாகத் தெரியும். ஆனால், நாமும் இறங்கி ஆட ஆரம்பிக்கும்போது நமக்கும் அந்த முன்யோசனை இருக்காது.

— லோவல்

---

# உண்மைப் பொங்கல்

மண்மகளாம் பொன்மகள் மேல்
மையல்கொண்ட பரிதி
பொண்ணொளியாம் கதிர்க் கரத்தால்
பூமகளைத் தழுவ
மண் மகரும் கலவியிலே
புயல் முகந்து செல்ல
விண்மகள்மேல் மழை வந்தால்
விளைந்தணளே நெல்லாள்

★ ★ ★

தமிழர்தம் அருதுழைப்பின் பயனைக் கண்டு
அகமகிழும் திருநாளாம் பொங்கல் நாளாம்
உழைப்பவர்தம் அரிதுழைத்த விளைத்த
வினைமுதல்
திளைத்துப் பெருமித மூரும் தெய்வ நாளாம்
உலகோர் அனைவருக்கும் உணவூட்டும்
தியாகிஎன்ன
உழைக்கின்ற உழவனுக்கோர்
பொன்னேர் நாளாம்
உழைப்பவனே உலகுக்கு அச்சாணி என்றே
உண்மை நெறி போற்றுகின்ற பொங்கல்
நாளாம்

— வீரசொக்கன்,
உடப்பூர்.

# பகிரங்க லஞ்சம்

அதோ! அந்தத் திரேசம்மா தேவாலயத்தில் யேசுவின் திருச் சிலுவையடியில் முழந் தாள் படியிட்டு இருக்கிருள் அந்தத் தாய். கண்களை மூடிய வண்ணமும், கைகளை விரித்த வண்ணமும் உருக்கமாக எதையோ இறைவனிடம் வேண்டிக் கொண்டிருக்கிருள். அந்தத் தாயின் மனதில் என்ன குறை? அவள் வாய் எதையோ முணுமுணுத்தது. ''இறைவா இம்முறை என். சி. ஜி. ஈ. பரீட்சையில் தோற்றி யிருக்கும் என் மகனை எப்படி யாவது சித்தியடைய வைத்து விடு. இந்த ஏழைமேல் கருணை காட்டு. அவன் சித்தியடைந்த தும் அவன் கையாலேயே உனக்கு ஐந்து ரூபாவுக்கு மெழுகுதிரி கொழுத்துவேன். சாப்பிட வழியில்லா விட்டா லும் இந்த நேர்த்தியைச் செலுத்த மறக்க மாட்டேன். கடவுளே என் மகன் மேல் கடைக்கண் பாரப்பா.''

கடவுளே உனக்கு என்ன சோதனை. நீ அவனிடம் ஐந்து ரூபா லஞ்சம் வாங்கப் போகி ருயா? அன்றேல் அவனையே நம்பியிருக்கும் அந்த ஏழைத் தாயைக் கண்ணீரில் மூழ்க வைக்கப் போகிருயா? செய்வ தென்னவென்று அறியாமல் நீ சிலையாக நிற்கின்ருயா?

★ ★ ★

அந்தச் சிவன் கோவில் வாச லில் வந்து நின்ற புத்தம் புதுக்காரிலிருந்து இறங்கிய சீமாட்டி ஒருத்தி கடவுளிடம் கரங்கூப்பி, சிரந் தாழ்த்தி என்ன தான் வேண்டுகிருள். ஆமாம், அவளுக்கு என்ன குறை?

பவனி வருவதற்குப் புத்தம் புதிய கார், அங்கம் எல்லாம் மின்னும் தங்கம், காண்போர் கண்ணைப் பறிக்கும் காஞ்சி புரச் சேலை, இத்தனை இருந் தும் எதனை அவள் இறைஞ்சுகி ருள். போதும் என்ற மனம் அவளிடம் இல்லையா? அது யாரிடம் தான் இருக்கிறது,

அந்தச் சிமாட்டியின் அதரங்கள் அசைகின்றன. ''சிவனே, என் மகளை இம்முறை ஜீ. சீ. ஈ. சாதாரண தரத்தில் பாஸ் பண்ண வைத்து விடு. என் பிள்ளையை முட்டாள் பட்டம் வாங்க வைத்து விடாதே யப்பா. என் மானத்தை வாங்கி விடாதே. என் பிள்ளையின் எதிர்காலத்திற்கு ஒளியேற்றும் பொறுப்பு உன் கையில்தான் இருக்கிறது. அவள் சித்தியடைந்து விட்டாளென்றால் இம்முறை திருவிழாவை என் செலவிலேயே நடாத்தி விடுகிறேன். நீ நினைத்தால் முடியாதது எதுவும் இல்லை அப்பனே, என்மேல் அருள் புரிவாயா இறைவா,''

சிமாட்டி சிவனின் முகத்தையே பார்த்த வண்ணம் இறைஞ்சிக் கொண்டிருக்கிறாள். ஆனால் சிவனோ இதெல்லாம் எனக்குப் பழக்கமாகி விட்டது என்று கூறுவது போல் மாறாத புன்னகையுடன் தாண்டவமாடிக் கொண்டிருக்கிறான்.

★ ★ ★

பரீட்சை முடிவை அறியச் சென்ற மகனை எதிர்பார்த்து வழிமேல் விழிவைத்து நிற்கிறாள் இன்னுமொருதாய். மலர்ந்தமுகத்துடன்ஓட்டமும்நடையுமாக வரும் தன் மகனைக் கண்டு அந்தத் தாயுள்ளம் மலர்கிறது. அப்படியே அவனை அரவணைத்துக் கொள்கின்றாள்.

''மகனே, நீ இந்தப் பரீட்சையில் சித்தியடைந்தால் அந்தோனியார் கோவிலுக்கு ஒரு கலன் தேங்காய் எண்ணெய் தருவதாக நேர்ந்து விட்டேன். இப்பவே அதைக் கொடுத்து விட்டு வந்து விடு'' என்ற தாயின் சொற்கேட்டு எண்ணெய்க் கலனுடன் அந்தோனியார் கோவில் நோக்கி நடந்து கொண்டிருக்கிறான் அந்தச் சிறுவன். எப்போதும் அழுது வடியும் அந்தக் கோவில் மெழுகு திரியும் கையுமாக வரும் சிறுவர்களால் நிரம்பிக் கொண்டிருந்தது.

மனிதனுக்கு மனிதன் இரகசியமாகக் கொடுக்கும் லஞ்சத்தை, இறைவனுக்கு மனிதன் பகிரங்கமாகவே கொடுக்கின்றானா?

சுய நன்மையை மட்டுமே கருதி கொடுக்கப்படும் இந்த லஞ்சங்களை இறைவனும் ஏற்பானா? இதற்கு விடை அந்த இறைவனுக்கு மட்டும்தான் தெரியும்.

— செல்வன்,

மொறிஸ் இம்மானுவேல்,

கொழும்பு 15.

# சிறுவர் உலகு

## தைப்பொங்கல் திருநாள் தமிழருக்கு இனிய திருநாள்

தமிழரின் விழாக்களுள் முதன்மையானதும் தனது நன்றியினைத் தெரிவித்துக் கொண்டாடப்படும் விழாக்களில் தைப்பொங்கலே சிறந்ததாகும். இத் தைப்பொங்கல் தமிழர் எங்கிருந்தாலும் அங்கு இவ்விழா நடைபெறுகின்றது. இவ்விழாவில் அருளுணர்வும் பக்தியும் உயிரோட்டமாகத் துடிப்பதைக் காணலாம்.

தைத்திங்களின் முதனாளே பொங்கற் புதுநாளாகும். இந் நாளில் மற்றத் தொழிலாளர்களை விட உழவர்களே இதில் முதன்மை பெறுகின்றனர். இவர்கள் ஆண்டு தோறும் உழைத்த உழைப்பின் பயனைக் கண்டு அக மகிழும் நன்னாள்.

தமிழன் தன் நன்றியுணர்ச்சியை வெளிப்படுத்தும் முகமாக மழை வளந்தந்து பயிர்களை வளரச் செய்த கதிரவனையும், பால் சொரிந்து தாயைப் போல் வளர்த்த பசுமாடுகளையும் தோளோடு தோள் நின்றுழைத்த எருமை மாடுகளின் சேவையையும் நினைத்து தைத்திங்கள் முதனாளைத் தேர்ந்தெடுத்துப் பொங்கல் இட்டு மகிழ்வர். இந்த விழாவே தைப்பொங்கலில் நன்றி கூறுதலையும் இவ்விழாவின் மகத்துவத்தையும் எடுத்தியம்புகின்றது.

தைப்பொக்கல் அன்று மண்ணின் பெருமையை நிலைநாட்டுவதற்குப் புதிய மண்பானையில் பொங்கலிடுவர். பொங்கல் திருநாளைப் பாட்டாளி தொடக்கம் முதலாளிவரை குதூகலமாகக் கொண்டாடுகின்றனர்.

தைப்பொங்கலின் மறுநாளே மாட்டுக்கு நன்றி செலுத்தும் முகமாக மாட்டுப் பொங்கல்

நடைபெறுகின்றது. இன்னுளில் மாடுகளைக் குளிப்பாட்டி மாட்டுக்கு மாலை, பொட்டு என்பன அணிவித்து, மாட்டுத் தொழுவங்களைத் துப்பரவு செய்து அதற்குப் பொங்கலிட்டுப் படைத்து அதற்குரிய நன்றிக்கடனைச் செய்வர்.

மனிதனின் மனம் எவ்வளவு தான் ஏற்றத் தாழ்வுடன் காணப்பட்டாலும் ஒரு நன்னுளில் அவனது தீய குணங்கள் களையப்பட்டு நல்லெண்ணம் மேலோங்கி, தான் உயிர் வாழ்வதற்கு எது காரணமோ அவற்றை நன்றி மறவாது நினைவு கூருகிறுன். "நன்றி மறப்பது நன்றன்று" என்பதற்கிணங்க சூரியனுக்கும், மாட்டுக்கும் தனது நன்றியை மறவாது செலுத்துவதை இவ் உலகத்தில் காணக்கூடியதாய் உள்ளது.

''தமிழரின் பண்பாடு வாழ்க!''

—ச, சத்யலஷ்மி,
மட்டக்களப்பு.

# தமிழனின் நன்றிக்கடன்

இல்லங்கள் தோறும் இன்பம் மலரக் கொண்டாடப்படும் இனிய திருநாள், எம்மதத்தினரும் உல்லாசமாக மன நிறைவுடன் கொண்டாடும் திருநாள் இத் தைப்பொங்கல் திருநாள்.

மேன்மையான நோக்கமோ, கடமையோ, பாசமோ இல்லாவிட்டால் வாழ்க்கை கௌரவத்துக்குரியதாக இருக்கும் என்று கருதுகிறீர்கள்? ஒருக்காலும் இருக்காது.

—எமர்சன்

இல்லத்தரசிகள் வாசலிலே அழகான கோலம் போட்டு வீட்டை அலங்கரிக்க, புத்தாடை அணிந்து துள்ளித்திரியும் குழந்தைகளும், வாணங்களோடும், வெடிகளோடும் பொழுதைக் கழிக்கும் சிறுவர்களும் இத்திருநாளுக்கு மேலும் மேலும் மெருகூட்டுவர். ஏர்பிடிக்கும் விவசாயிகள் தம் மனைவி மக்களுடன் தாம்மகிழ்ந்து வீட்டில் இருக்கும் நாளுமிதுவே! அயல் வீடுகளில் வசிப்போருடன் புது உறவை உருவாக்கி மக்கள் மகிழ்வதும் இந்நாளிலே. இளையோரும், முதியோரும், படித்தோரும், பாமரரும் புத்துணர்வோடு, உற்சாகத்தோடு கொண்டாடும் இத்திருநாள் ஓர் இனிய திருநாளே.

— A. E. ரட்ணகுமார்,
கைதடி.

உங்கள் கவனத்துக்கு

# தேசீய தினங்களின் பட்டியல்

## List of Nation Days

| | | |
|---|---|---|
| 01 | தை | கியூபா/Cuba (Republic of) |
| 01 | ,, | சுடான் / Democratic Republic of the Sudan |
| 04 | ,, | பர்மா/Socialist Republic of the Union of Burma |
| 26 | ,, | இந்தியா (குடியரசுதின) / India |
| 26 | ,, | அவுஸ்திரேலியா / Commonwealth of Australia |
| 06 | மாசி | நியூசிலாந்து / Newzealand |
| 17 | ,, | காம்பியா / Gambia |
| 18 | ,, | நேபாளம் / Nepal |
| 26 | ,, | குவைத் / Kuwait |
| 27 | ,, | டொமினியன் குடியரசு / Dominion Republic |

## உங்களுக்கு தெரியுமா ?

★ எமது உடலில் ஏதும் கூரிய ஆயுதங்களால் காயம் ஏற்பட்டு அவ்வாயுதம் அல்லது உடைந்த பாகங்கள் உடலில் புதைந்து இருந்தால் அதை அகற்ற முயற்சித்தலாகாது. உடனே தகுந்த வைத்தியரிடம் எடுத்துச் செல்லவேண்டும்.

ஏனெனில், தாக்கிய கூரிய ஆயுதம் குருதிக் குழாய்கள் மற்றும் பல முக்கிய உறுப்புக்களை ஊடுருவிச் சென்றிருக்கலாம். எனவே அவ்வாயுதத்தை இழுத்து வெளியில் எடுக்கும்போது, துண்டாடப்பட்ட குருதிக் குழாய்களிலிருந்து மேலும் அதிகமாகக் குருதி வெளியேறும். அத்துடன் இவ்வாறு உடலில் ஏறியுள்ள ஆயுதங்களை எடுக்க எத்தனிக்கையில் வேறு புதுக் காயங்களும் ஏற்பட வாய்ப்புண்டு. சுருங்கக் கூறினுல்—ஏற்படும் ஆபத்து அதிகம். எனவே, உடற்கூற்று வல்லுனர்களே இதனைச் செய்யப் பொருத்தமானவர் என்பது தெளிவு.

★ நீரில் நன்கு அவிக்கப்பட்ட முட்டையை, தளத்தில் வைத்து பம்பரம் சுற்றுவது போல் சுழற்றினுல் அது நன்கு சுழலும்; ஆனுல் அவிக்கப்படாத ஒரு முட்டையை இவ்வாறு செய்யும்போது அது முன்புபோல் நன்கு சுழல்வதில்லை.

திரவங்கள் "பிசுபிசுப்புத் தன்மை" உடையவை. அவிக்கப்படாத முட்டையினுள் உள்ள கூறுகள் திரவங்களாக உள்ளதால், அம்முட்டை சுற்றப்படும் போது உள்ளே உள்ள திரவம் முட்டைக் கோதுடன் பிசுபிசுப்பு

உராய்வு விசையை ஏற்படுத்துகிறது. உராய்வு விசையின் காரணமாக முட்டை அதிக நேரம் சுழல்வதில்லை. ஆனால் அவித்த முட்டையினுள் உள்ள கூறுகள் திரவ நிலையில் இல்லை — ஆனால் திண்ம நிலையில் உள்ளன. எனவே சுற்றப்படும்போது உராய்வுவிசை ஏற்பட இடமில்லை ஆதலின் அது நன்கு சுழல்கிறது.

இத்தன்மையைக் கொண்டு அவித்த முட்டைகளையும் அவிக்காத முட்டைகளையும் இலகுவில் வேறுபடுத்த முடியும்.

★ மைநிரப்பும் பேனாவில், மை முடியும் தறுவாயில் அதிகளவு மை கொட்டுவது(கக்குவது) அவதானிக்கப்பட்டுள்ளது. இதன் காரணம் என்ன?

ஏனெனில் மை முடிந்து கொண்டிருக்கும்போது பேனையின் உள்ளே ஏற்படும் வெற்றிடத்தை வளி (காற்று) நிரப்பும். அத்துடன் எமது உடல் வெப்பம் பேனைக்குச் செல்வதால் மை விரிவடைகின்றது. எனவே வளி அமுக்க வேறுபாட்டாலும் விரிவடைவதாலும் மை கசிகிறது எனலாம்.

★ எமக்கு தடிமன் போன்ற தொண்டை தொடர்பான நோய்கள் உண்டாகுங்காலை, காது கேட்பது மந்தமாகி தற்காலிகச் செவிட்டுத் தன்மை ஏற்படுகிறது.

ஏனெனில் எமது செவியின் நடுப்பாகத்துக்கும் தொண்டைக்குமிடையே ஊத்தேகியோவின் குழாய் (Eustachian tube) என்ற கால்வாய் தொடர்பை ஏற்படுத்துகிறது. தடிமனின்போது இப்பாதை அடைபடுவதால் தொண்டையிலிருந்து காற்று நடுச்செவிக்கு செல்ல முடியாமல் போகிறது. இதனால் நடுச் செவியில் காற்றின் அமுக்கம், (வெளியிலுள்ள காற்றினமுக்கத்திலும்) குறைகிறது. இதன் விளைவாக செவிப்பாறையின் இழுவிசை (Tension) அதிகரிக்கிறது: அதிகரிக்கவே அதன்அதிர்வு(Vibration)

## பொங்கலே !

பொங்கிடும் பொங்கல்
பானையின்,
வயிற்றினுள் வெந்து
சமிபாடடைந்திடும்
தவிட்டு அரிசியே !
உன் கடைக்கண்
பார்வைதனைத் தேடி,
கண்ணீர் வடித்திடும்,
களைப்புற்றோர்கள் கோடி !
அவர் துயர் துடைக்க
நீ வெந்திடுவாய்
அவர் வயிறு
நிறைந்திட
நீ
பொங்கிடுவாய்

—S. புஸ்பராணி அந்தரேஸ்
முதலியார்,
பரந்தன்.

குறைகிறது. இதனல் செவியின் கேட்குந்திறன் மந்தமாகிறது. ஊத்தேகியோவின் குழாயில் ஏற்பட்டுள்ள அடைப்பு அகலும்போது பழையபடி செவி கேட்குந் திறனைப்பெற்றுவிடும்.

★ பேசிக்கொண்டிருக்கும் போது பின்புறமாகக் கையைக் கட்டிக்கொண்டு பேசுதல் தவிர்க்கப்பட வேண்டியதாகும். ஏனெனில் இத்தகைய பழக்கமுடையோர் மற்றவர்களை நேருக்கு நேர் பார்க்கும்போது அல்லதுபேசும்போது அவர் ஒரு மனேவசியக் கலை அறிந்தவராயின் இவரை இலகுவில் வசியப்படுத்தி தன்வழிக்கு கொண்டு வந்துவிடலாம். அன்றியும் கையைப் பின்புறம் கட்டிய நிலையில் இருக்கும் ஒருவரை மனேவசியக் கலையைக் கற்காத சாதாரண மனிதனே இலகுவில் தன் வசப்படுத்திவிட முடியும் என ஆய்வாளர்கள் கண்டுள்ளனர்.

# பொங்குக இனிதே பொங்கலுமே!

ஏர்பிடிப்போர் கைகள் ஓங்கிடவும்
ஏந்தி வாழும்குலம் தாழ்ந்திடவும்
பாரில் மகிழ்ச்சி பொங்கிடவும்
பொங்குக இனிதே பொங்கலுமே

உழுதுண்டு வாழ்வாரே உய்வுற்ருேர்
உயர்குலம் அவருமே அறிந்திடுவீர்
பழுதின்றி அவர்வாழ்வு பரிமளிக்க
பொங்குக இனிதே பொங்கலுமே

ககனம் ஒளிபெறும் கதிரவனின்
களங்கமற்ற கதிர்களைப் போல்
அகமே மகிழ்ந்து அக்களிக்க
பொங்கி வழிந்தது பொங்கலுமே

— அ. அமிர்தருஜ்,
யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி மாண்வன்,
யாழ்ப்பாணம்.

# பாவம், அவனைத் தூங்க விடுங்கள்

உழைத்து வந்த களைப்பு சந்திரனுக்கு. என்றாலும் வீதியோரக் காட்சி அவன் மனதில் சுழன்றது. ஆறு குட்டிகள் போட்டிருந்தாலும் ஒன்றையும் இழக்க அது சம்மதிக்கவில்லையே. தாய்ப்பாசம் இத்தனை வலுவுள்ளதா ?

''அப்பா''

என்னம்மா கண்ணு, என்ன வேணும்?''

''ரகு என்னை அடிச்சிட்டாம்மா''

''அம்மா பார்த்துக்கிட்டா இருந்தா — ராஸ்கல், கையை உடைக்கலியா?''

''ஆனு எனக்கு வலிக்கலேப்பா, ரகு பாவம் பா''

''அடிச்சாங்ரே, பாவம்னு வேற சொல்ரே என்னம்மா''

''நீ அவனுக்கும் அப்பாவாம், நான் இல்லேன்னேன். அதுதான் அடிச்சான், ஆனு அம்மா என்னை தான் திட்டினு, நீ அவனுக்கும் அப்பாவாமே —அம்மா சொல்ரு? ஏம்பா?''

''என்னம்மா?''

''நீ நெஜமா அவனுக்கும் அப்பாவா? ஏன் அவனை தூக்கவே மாட்டேங்ரே?''

''நான் உனக்கு மட்டும் தாம்மா அப்பா''

''ம்...... ரகு, பாவம்பா''

சந்திரன் பங்கஜத்தை மணந்த போது சொர்க்கமே காலடியில் வீழ்ந்ததாக உணர்ந்தான். காதலர்களர்கத் திளைத்த போது ஏற்பட்ட இன்பக் கிளுகிளுப்புகள். ஒயிலாக நடந்து, இதமாகச் சிரித்து' கனிவாகப் பேசும் — பதுமையான பங்கஜம் தனக்குக் கிடைத்தது அவனுக்குக் கனவாகவும் தோன்றியது. அழகுடன் பண்பும் இருந்ததால், 'வசதி'யை கவனிக்கவில்லை. மணமாகி மூன்று மாதங்கள் முழுதாக முடியு முன்பே அவள் தாய்மையைத் தாங்கிக் கொண்டு.....................

''என்னங்க நாலு இடத்துக்குச் சரியாகப் போகு முன்பே..........''

''தனியாகப் போகாம துணையோடு போக உனக்குக் கசக்குதோ''

''ம்...... எனக்கு வெட்கமா இருக்கு அத்தான்''

''ஏன் அவனும் வந்து கும்மாளத்திலே கலந்து கொள்வான்னு தானே''

''போங்க'' என்றவள் அவன் கன்னத்தைக் கிள்ளினாள்.

''சரி பங்கு, நமக்கு என்ன குழந்தை பிறக்கும்னு சொல்லேன்''

''உங்களைப் போல..........'' என்று அவள் தொடங்க

''இப்படி அவலட்சணமாக'' என்று அவன் முடித்தான்.

''என்னங்க'' என்று சிணுங்கியவளை மெல்ல இழுத்து, ''என்ன பேரு வைக்கலாம்'' என்றான்.

''இப்பவே என்னங்க அவசரம்''

''அப்ப தானே ஆறு மாதத்திலே முடியும்—ஆமா, சிவாஜி, ஜெமினி, எம். ஜி. என்று வைப்போமா?''

என்னங்க என் மகன் என்ன கண்டவளோடு கூத்தடிக்கிறவள் என்னு நெனச்சீங்க''

''சரி நீயே சொல்''

''ரகு''

''சே, சுத்த கர்னாடகமா இருக்கிறியே நீ''

''இல்லேங்க எனக்கு கனவிலே அப்படி அப்படி...........''

''ஓஹோ, இந்த நூற்றாண்டு அதிசயமோ?''

''என்னவோ அத்தான் ஒரு வெள்ளைத் தாடி பெரியவர் போல ஒருவர் வந்து, 'ரகு'ன்னு பேரை வைச்சா குழந்தையாவது பிழைக்கும் இல்லேன்னா....'' என்று முடிக்குமுன், சே, என்ன பங்கு இது, நல்லதையே நினைக்க வேண்டிய நேரத்திலே இப்படி அபஸ்வரமா...... விளையாட்டுக்கும் இப்படிப் பேசாதே'' என்று பதறிய கணவனை ''என்னங்க சின்னப்பிள்ளை மாதிரி'' என்று சொல்லியவாறு மனம் நிறைந்த பூரிப்புடன் பார்த்தாள். தனக்காகத் துடிக்கும் ஜீவனல்லவா அது?

பங்குவின் சொல்லைத் தட்ட முடியாமல் 'ரகு' என்று தனது குழந்தைக்குப் பெயரிட்ட சந்திரன் எண்ணிப் பத்தே நாட்களில் பங்குவைப் பறிகொடுத்தான். அன்றிலிருந்து ரகுவை அவன் வெறுத்தான்.

* * *

''என்னங்க தூங்கிட்டீங்களா''

'' வாணி''

'' பாவம் அந்த ரகு''

அந்த தரித்திரத்தாலே தானே 'அவளை' இழந்தேன்''

'' அதற்கும் இதற்கும் என்னங்க சம்பந்தம் ''

'' எனக்கென்னமோ பிடிக்கலே''

''ராஜி படுக்கிறுளே நானும் அப்பாகிட்ட படுக்கிறேன்னு அந்தப் பச்சைக் குழந்தை கையையும் காலையும் ஆட்டி கெஞ்சும்போது.......... '' என்று தொடங்கியவள் கணவன் அதை விரும்பவில்லை என்றதும் விழுங்கினுள், அவனும் அவளைத் தொடர்ந்து பேச விடவுமில்லை. நினைவுகள் ஒழிந்தன. உணர்வுகள் விழித்தன. உணர்ச்சிகள் சிலிர்ந்தன,

* * *

விளையாட்டுப் பொம்மையோடு படியேறியவன், ''அப்பா'' என்ற குரல் கேட்டு, '' என்னம்மா ராஜி இதோ உனக்.....'' என்றவன் ரகுவைக் கண்டு முகம் சுளித்தான்.

'' இங்கேண்டா வந்தே''

''எனக்கொரு ஆசையப்பா''

'' முகத்திலே விழிக்காதேன்னு சொன்னேனில்லையா?''

'' அப்பா எனக்கொரு ஆசையப்பா ''

'' இந்தா பிடி சனியன் '' என்று பொம்மையைக் கட்டிலில் வீசி எறிந்தான். ஆனுல் அந்த விளையாட்டுப் பிள்ளை அதைப் பார்க்கவும் இல்லை. அவனையே ஏக்கத்தோடு பார்த்தது. ''இது வேணும்பா உன்னேடு படுக்கணும்னு ஆசையா இருக்கப்பா''

''சீ சனியன்'' என்று கையை தூக்கினுன் சந்திரன்

'' எனக்கு ஆசையா இருக்கப்பா. இன்னைக்கு மட்டும்பா''

'' வாணி இந்தச் சனியனை யாரு இங்கே விட்டது ''என்று இரைந்தவாறு குழாயடிக்குச் சென்முன் சந்திரன்,

* * *

'' ராஜி''

''ரகு''

''எனக்கு ஆசையா இருக்கு ராஜி''

'' அப்பா தந்த பொம்ம தானே, நீயே வைச்சுக்க ரகு''

'' அது வேணும் ராஜி ''

''அப்ப..........''

''எனக்கு அப்பா கிட்ட படுக்கணும் ராஜி, ஆசையா இருக்கு''

''அவர் ஏன் ரகு உன்னேடு பிரியமில்லே''

''எனக்கு ஒண்ணுமே தெரியாது ராஜி''

''நீ அப்பாவை அடிச்சியா''

''இல்லையே''

''அவருட பேனையை சுவத்தில கீறினியா?''

''ஊஹூம்''

''உன்னைப் பார்த்தா பாவமா இருக்கு ரகு, நான் அப்பாகிட்ட சொல்லவா?''

''ஒன்னையும் அடிச்சா, ராஜி நீ அப்பா தூங்கினப்புறமா வந்து ஏங்கிட்ட சொல்லேன். நான் அம்மாகிட்ட தூங்காம முழிச்சிருப்பேன். நீ சொன்னதும் நான் போயி அப்பாகிட்ட படுப்பேன், சரியா?''

', ரகு நான் நேரத்தோட தூங்கிடுவேனே. வேணும்னு, நீ அப்பா ரூம் தெரியும்தானே. அவர் கதவைப் பூட்டவே மாட்டார். அதனல் நீ வந்து எட்டிப் பார், அப்பா தூக்கம்னு மெல்ல வந்து என்னைத் தட்டு நான் எழும்பி அம்மாகிட்ட வந்துடறேன், என்ன சரிதானே.'' ரகு மலர்ச்சியோடு ஓடினன். ஏனென்ருல் இன்று இரவுதான் அவன் உண்மையாகவே தூங்கப் போருன்.

ஐந்து வாட் மின்விளக்கு ஒளியை அடக்கமாக உமிழ்ந்து கொண்டிருந்தது. வெள்ளிக்கிழமை இரவு. ஊதுவர்த்தியின் நறுமணம் அறையில் கிளுகிளுப்பை ஊட்டிக்கொண்டிருந்தது. சந்திரன் காத்திருந்தான். அவன் மட்டுமா, அவனுடன் பாலும் பழமும் அல்லவா கூடவே காத்திருந்தன. வாணி இன்னும் வந்தபாடில்லை.

''அப்பாடா ஒரு வழியாகச் சனியன் ரகு தூங்கிவிட்டான் போல, அதுதான் அவள் வரும் சப்தம் கேட்கிறது'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். கதவை எவரோ தள்ளும் சப்தம் கேட்டுச் சாகாத உணர்ச்சிகளோடும், போராடும் உணர்ச்சிகளோடும், வேறும் சில பாவங்களோடும் விழிகளை வாசலில் நிறுத்தினன். கதவு திறந்தது. ''வாவேன் வாணி'' என்று அவசரப்பட்டான் சந்திரன். திறந்த கதவின் வழியாக நுழைந்த தலை இதைக் கேட்டதும் நடுங்கியது.

'' அப்பா. நான் நான்......'' ரகு குளறினன்,

'' இங்க, இப்ப, ஏனடா வந்தே ?''

'' உன்னேடு படுக்கணும்னு ஆசையப்பா...... இன்னைக்கு மட்டும்பா......''

'' சனியன் அவள் இருக்க நீ செத்துத் தொலைத்திருக்கனும்''

''இன்னைக்குப் படுத்திட்டு நாளைக்கு வெணும்னு நான் செத்துப் போறேம்பா'' ''சீ போடா கழுதை'' என்று

அறைந்தான் சந்திரன். அதிர்ச்சியில் வெளியே வந்து விழுந்தவனை வாணி தாங்கிப் பிடித்துக் கொண்டாள். ரகு பேந்தப் பேந்த விழித்தான்' ''அம்மா, அம்மா'' என்று முணங்கியவாறு, ''இன்னைக்குப் படுத்திட்டு நாளைக்கு வேணும்னு நான் செத்துப் போறேம்மா'' என்று தன் பிஞ்சுக் கரங்களால் வாணியின்முகத்தை வருடினான். அவளால் பொங்கி வந்த அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

சந்திரனுக்கு அன்று வேலையே ஓடவில்லை. அன்றிரவு தான் நடந்து கொண்டது சரியா, "இன்னைக்கு மட்டும் படுத்திட்டு நாளைக்கு வேணும்னு நான் செத்துப் போறேம்பா' என்ற குரல் ரீங்காரமிட்டது. முதன் முதலாக அவன் இதயம் நடுங்கியது. கண்களில் கண்ணீர் திரையிட்டது. கண்களை ஒரு கையால் துடைக்கவும் டெலிபோன் அடிக்கவும் சரியாக இருந்தது.

''ஹலோ, சந்திரன் ஹியர். யெஸ் வாணியா? என்னது ரகுவை 'அட்மிட்' செய்திட்டியா, ஜன்னியா எங்கே? வாணி இதோ இதோ ஓடி வாறேன்''

*

சந்திரனைக் கண்டதும் சூழ நின்றவர்கள் வழி விட்டனர். ''கண்ணே ரகு, ரகு'' என்றவாறு கட்டிலை நோக்கிக் குனிந்தான். ''ரகு, ரகு நான் தானடா, இதோ. இனிமேல் ஒவ்வொரு நாளும் என்னோடு தூங்கலாம் ரகு, ரகு'' என்று கதறினான். அங்கே..................

''அப்பா, எனக்கு ஆசையா இருக்கப்பா, இன்று மட்டும் உன்னோடு படுத்துட்டு நாளைக்கு வேணும்னு நான் செத்துப் போறேம்பா, அப்பா...... அப்பா...... அப்......'' என்று முணங்கியவாறு அந்தச் செல்வத்தின் ஆவி அடங்கிக் கொண்டிருந்தது.

—M. A. M. அஜுவாஹிட்,
11, அக்பர்ஸ் லேன்,
கொழும்பு—12.

கண்டனம் கண்டபடி - அதன் வழி
எண்ணியது எண்ணியபடி எழுதுகிறேன்



# அமெரிக்க அநுபவங்கள்

**6**

கரவையூர்ச் செல்வம்.

## மன்னிக்கவேண்டி வாழ்த்துகிறேன்

கார்த்திகை—மார்கழி இதழில் எனது கட்டுரையைத் தொடர முடியவில்லை. என்னுல் தவிர்க்க முடியாத தவணையின் இறுதிக் கட்ட பரீட்சைக்காலக் கெடுபிடிகளினுல் இந்த இழப்பு ஏற்பட்டமைக்காக மனம் வருந்தி, வாசக அன்பர்களின் பெருந்தன்மை நிறைந்த மன்னிப்பை வேண்டி நிற்கின்றேன்.

இக்கட்டுரையை, புதியஆண்டு ஆரம்பிக்குமுன்னர் நான் எழுதினுலும், வாசக அன்பர்களின் கரங்களில் இம்மலர் புரளும் பொழுது, 1981-ஆம் ஆண்டு பல நாட்களைக் கடந்து அந்தப் ''புதிய'' மணத்தையும் இழந்து விடும். ஆயினும் எனது அன்பும் தமிழும் நிறைந்த வாழ்த்தைத் தெரிவிக்க வேண்டுமென எனது மனந் துடிக்கின்றது. புதிய ஆண்டில் உங்களது ஒத்துழைப்பினுலும், நல் விமர்சனங்களினுலும் ''புதிய உலகம்'' சஞ்சிகையும், எழுத்தாள அன்பர்களும், வாசக அன்பர்களும் மீண்டும் ஒருபடி உயர்வார்களென்பது எனது நம்பிக்கை. அதுவே எனது வாழ்த்துமாகும்.

### நத்தார் மயம்! விடுதலை மணம்!

மார்கழி இறுதிக் காலத்தில் இந்நாட்டில் வாழ்வது ஒரு தனி அனுபவம். வீசும் தென்றலிலும், சுற்றியிருக்கும் சூழலிலும்கூட நத்தார் மணக்கும். விடுதலை சுவைக்கும். எங்கும் அழகான வண்ண வண்ணக் காட்சிகள்! பனிக்கால இயற்கையும், மனிதனின் கை வண்ணத்தினுல் அழகூட்டப்

பெற்ற செயற்கை அழகும் ஓர் இயல்பான முறையில் கலந்து சங்கமமாகிவிட்டசிறப்பு பார்த்து அனுபவிக்க வேண்டிய ஒன்று.

கடைகளில், வகைவகையான பொருட்கள் குவிந்து கிடக்கும் உலகில் பஞ்சமோ, வறுமையோ இருக்கின்றதா என்ற ஒரு சந்தேகமே எழும்பிவிடும்! நத்தாருக்குரிய சோடினைகள் இல்லாத கடை, அலுவலகம், வீடு, கட்டிடம் இல்லையென்று கூறின் அது கிஞ்சித்தும் மிகைபடக் கூறல் அன்று. நத்தாருக்குரிய இசையும் பாடலும் எங்கும் இதமாகக் கேட்கும். கடைகளில் இந்த இசையும் பாடலும் மென்மையாக ஒலிக்கும்பொழுது, அதுவேறு பொருட்களை வாங்கத் தூண்டிவிடும். இந்த நாட்டின் செல்வக் "கொழுப்பு" இந்நாட்களில் இரட்டிப்பாகக் காட்சிதரும்,

## இருபெரும் விழாக்கள்

வடஅமெரிக்க மக்கள் பல விழாக்களைக் கொண்டாடினுலும் இரண்டு விழாக்கள் இவர்களுக்கு மிக முக்கியமானவை. ஒன்று "நன்றிவிழா" (Thanksgiving Day), மற்றையது நத்தார் விழா. முதலாவது விழா, கார்த்திகைத் திங்களில் வரும் இறுதி வியாழனில் கொண்டாடப்பெறும். இந்த இரு விழாக்களையும் மிக்க உணர்ச்சியோடும், நன்றியோடும் ஒருவகைப் பாரம்பரியக் கட்டுக் கோப்புடனும் கொண்டாடுகிறுர்கள், இம்மக்கள்.

இறைவன் தந்த அருங்கொடைகளுக்காக, முன்னேரின் அயராத கடும் உழைப்பிற்காக, போர்களில் கண்ட வெற்றிகளுக்காக, போரடி உயிர்இழந்த வீரர்களுக்காக, இந்தநாட்டை அத்திவாரம் இட்டுக் கட்டியெழுப்பிய அரும் பெருந் தலைவர்களுக்காக (The Founding Fathers) நன்றி கூறும் விழாவே, இந்த நன்றிவிழா. ஓரளவு எங்களுடைய பொங்கல் விழாவை இவ்விழாவுடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

இந்த இரு விழாக்களையும் குடும்ப விழாக்கள் என்று அழைப்பது பொருத்தமாகவே அமையும். பெற்ருேர் பிள்ளைகள், உற்ருர் உறவினர் ஒன்றுகூடி மகிழும் விழாக்கள், இவை அன்ருட வாழ்க்கையில் அயலவரை ஓரளவு மறந்து, அவசர ஓட்டத்தில் சொந்த வீட்டிலேயே "சொந்தமின்றி" வாழும் அதாவது ஓர் உறவு "அறுபட்ட" சூழலில் வாழும் இம்மக்கள் இவ்விரு விழாக்களையும் பெரிதாக மதித்து குடும்பம் ஒன்றுகூடுவதை ஓரளவு வற்புறுத்துகிறுர்கள்.

இவ்விழாக்களில் இவர்களது பெரிய உணவு (The long meal) பிற்பகல் மூன்று மணிக்கு ஆரம்பமாகும். (பெரும்பான்மையான அமெரிக்க மக்கள் இரவு உணவு ஒன்றையே பெரிய உணவாக உண்பதுண்டு. அதனல் இவ்வுணவை வழமையாக மாலை 5-00—7-00 மணிக்கிடையி

உண்பார்கள்). விழா விருந்து பிற்பகல் மூன்று மணிக்கு ஆரம்ப மாகி, இரவு ஒன்பது, பத்து, பதினொன்று, பன்னிரண்டு...... என்று இரவினூடாக வளர்வது இவர்களைப் பொறுத்தமட்டில் வியப்புக்குரியதல்ல.

பெரிய உணவு முடிந்தாலும், அது முடியாமல் வளரும். ஆமாம் எதையாவது குடித்துக் கொண் டும், கொறித்துக்கொண்டும் பல அனுபவங்களைப் பகிர்ந்துகொண் டும், பழையகால நினைவுகளை மீட் டுக்கொண்டும் ஒரு நெருங்கிய குடும்ப சூழலில் இவ்விழாக்கள் இரவினூடாக வளரும். பழைய பாடல்களைப் பெருமையுடனும், பெரு மகிழ்வுடனும் பாடி நிறைவு காண்பார்கள். இப்பாடல்கள் தொடங்கும்பொழுது அனைவரும் ஒரு பாடும் சூழலிலே இருப்பார் கள். அதாவது, வழமையாகப் பாடாதவர்களும் பாடகர்களாகி விடுவார்கள். பாடல்களில் அவ ரவர் பண்பாட்டு உணர்வுகள், நாட்டுப்பற்றுத் தனியாக ஒலிக் கும்.

நத்தார் விழாவில் இன்னுமோர் சிறப்பு, பரிசில்கள் பரிமாறுதல், பெற்றோர் பிள்ளைகளுக்கும், பிள் ளைகள் பெற்றோருக்கும் பரிசில்கள் வழங்குவார்கள். கணவன், மனைவி, பிள்ளைகள் தங்களுக்குள் ளே பரிசில்கள் பரிமாறுவார்கள். ஒருவருக்கொருவர் நன்றிகூறி பரி சில்களைப் பாராட்டி மகிழ்வது ஒரு தனியான சிறப்பு. குழந்தை கள் ஆவலோடு எதிர்பார்த்திருக் கும் நேரம், இந்தப் பரிசில் பரி மாறும் நேரந்தான்.

இந்த விழாக்களுக்கு ஒருநாள் தான் விடுதலை கிடைத்தாலும், நெடுந்தூரங்களில் இருந்து பய ணஞ் செய்கிறார்கள். இங்குள்ள பயண வசதிகள் அதற்கு வழி வகுத்து விடுகின்றன. குடும்பத் தில் யாராவது ஒருவர் இந்த விழாவில் பங்குகொள்ள முடியா மல் தூரத்தேஉள்ள பிறிதோர் மாநிலத்திலேயே தங்கிவிட்டால், குடும்பமே அவருடன் தொலை பேசியில் தொடர்புகொண்டு நீண்டநேரம் உரையாடுவார்கள். அவருக்குரிய பரிசு அதற்கு முன் னரேயே அஞ்சல்வழி அனுப்பி வைக்கப்படும்.

நான் எனது நாட்டுத் தொலை பேசியை எண்ணிப் பார்ப்பேன். கரவெட்டியில் இருந்து யாழ்ப்பா ணம், Trunk call தான் எடுக்க வேண்டும் — (17மைல் தூரம்). அதுவும், பெரும்பான்மையான நேரங்களில் தொடர்பு அறுபட்ட நிலையிலேயே இருக்கும். அஞ்சலக முதல்வர் அப்பா முறையானால் அறுபட்ட தொடர்பும் இணைபட் டுவரும். * கொழும்பில்—இருந்து யாழ்நகர் தொடர்புகொள்ள எட்டு மணித்தியாலங்கள் காத் திருக்கச்சொல்லிக் கட்டளைவரும். தொலைபேசி அலுவலகத்தில் மச் சானோ மாமனோ இருந்துவிட் டால், எட்டு நிமிடங்களுக்குள்

* 4-2-81முதல் யாழ்ப்பாணம் — கொழும்பு நேரடித் தொலை பேசித் தொடர்பு ஏற்பட்டுள்ளது.

தொடர்பு கிடைத்துவிடும். உரக்கப் பேசாவிட்டால் மறுமுனையில் இருப்பவருக்குக் கேட்காது. ஆகவே, இம்முனையில் ''கத்த''வேண்டிய கழுதையின் நிலை! அண்டை அயலில் எல்லாம் உரையாடல் கேட்கும். ஆனல், மறுமுனையில் காதோடு காதாகத் தொலைபேசி வைத்திருப்பவர், ''கொஞ்சம் உரக்கப் பேசுங்கோ! ஒண்டும் கேட்கவில்லை'' என்று கெஞ்சுவார்.

இங்குள்ள தொலைபேசித் தொடர்பு அருமையானது.

## மறைந்துகிடக்கும் மனித நோவுகள்

முதியவர்களைப் பராமரிப்பதற்கும், இளைப்பாறியவர்கள் வாழ்வதற்கும் பல மாடிக் கட்டிடங்கள் இந்நாட்டின் நகரங்களிலெல்லாம் நல்ல வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளன. குடும்பப் பொறுப்புகளைமுடித்துக்கொண்ட பலர், (கணவனும்மனைவியும் ஒன்ருக, அன்றேல் விதவையாக) தங்கள் இறுதிக் காலத்தை இப்படிப்பட்ட ஒரு தனிமையான சூழலிலேயே கழிக்கிறார்கள். இவ்வாழ்க்கைமுறை இன்றைய ''பண்பாக'' ஏற்றுக்கொள்ளப் பட்டாலும், ஒரு வெறுப்பொன்று இவர்களிடம் மறைந்து கிடக்கின்றது. இவர்களுடைய தனிமை, ஒதுக்கப்பட்ட உணர்வு இவர்களுக்கு ஒரு நோவைக் கொடுக்காமல் இல்லை. முகங்களைப் பூசி மெழுகினலும், உடல்களை அழகுபடுத்தி உடுத்தி மறைத்தாலும், இவர்களுடன் நெருங்கி உரையாடும்பொழுது அகத்தில் உள்ள அந்த நோவும் வெறுப்பும் இவர்களது சொற்களில் தோன்றுமலில்லை. வயதோடு தோன்றும் சுருக்கங்களில், இந்த நோவு பின்னிப் பிணைந்து காட்சிதரும்,

மேற்கூறிய விழாக்களின் பொழுது, இவர்களது பிள்ளைகள் அன்றேல் பேரப்பிள்ளைகள் இவர்களுக்குப் புதிய உடைகளைப் பரிசாக அளித்து,வீட்டுக்கு அழைத்து வந்து இந்த விழாக்களில் இவர்களையும் பங்குகொள்ள வைத்து மகிழ்வது வழக்கம். இதனுல் இரு தரப்பினருக்கும் இந்த ஒன்றுகூடல் ஒரு தற்காலிக மகிழ்வையும் நிறைவையும் கொடுக்கின்றது.

ஆயினும், பிள்ளைகள் இன்றி, உற்றார் உறவினர் இன்றி, தேடுவாரற்று, எட்டித்தொட யாருமே இல்லாது, இந்த உயர்மாடிக் கட்டிடங்களுள் கல்லோடு கல்லாகக் கலந்து கண்ணீர்விடும் முதியோர் பலப்பலர். நன்றிகெட்ட பிள்ளைகளின் நினைவு நஞ்சாகக் கொல்லும். திருமண முறிவுகளால் ஏற்பட்ட மன முறிவுகளால் நொருங்கிய உள்ளங்கள் வேதனையுறும்.

இந்த நாட்டுக்காகப் போர்க்களம் சென்று, கை கால் இழந்தவர்கள், அங்கவீனமானவர்கள்,

சிறைகளில் பலகாலம் இருந்து சிந்தனையை இழந்தவர்கள் ..... என்று இந்தப் பட்டியல் நீளும்.....

இவ்விழாக்களின் பொழுது இவர்களது தனிமையான வேதனை ஒதுக்கப்பட்ட உணர்வின் நோவு இரட்டிப்பாக வளர்கின்றது. இதனால் இக்காலத்தில் மோட்டார் விபத்துக்கள் அதிகமாகின்றன. குடிவெறி கூடுகின்றது. தற்கொலைகள் பெருகுகின்றன.

செல்வம் கொழிக்கும் நாடுதான், வட அமெரிக்க நாடு. அந்தச் செல்வமே இந்த வேதனைகளுக்கு அடிப்படைக் காரணமாக மாறுவதும் உண்டு. அது மட்டுமல்ல, இங்கு வறுமை இல்லையென்பது ஒரு தவருன பிரச்சாரம். இந்தக் கடுமையானகுளிரைத் தாங்க முடியாமல் வேதனையுடன் நடுங்கும் ஏழை உடல்கள் ஆயிரமாயிரமாக உண்டு. இந்த விழாக்காலங்களில் தென்றலிலேயே நத்தார் மணக்கும்பொழுது, அதே தென்றல் இந்த ஏழைகளை முள்ளாகக் குத்துகின்றது. கடைகளில் விற்பனைக்குள்ள அழகான பொருட்கள், வகைவகையான உணவுகள் முதலியனவற்றைக் கண்ணுடிகளினூடாகப் பார்த்து ஏங்கும் கண்கள் பலப்பல. பொருட்களின் விலைகள் ஏறஏற, வறுமை வளர்கின்றது. இந்த நாடு அதற்கு விதிவிலக்கல்ல.

## தேசிய நத்தார் மரம்

தலைநகரில் இந்நாட்டுத் தலைமகனுக்கு ஓர் அழகான வெள்ளை மாளிகை உண்டு. இந்த வெள்ளை மாளிகையின் பின்புறத்தில் ஒரு கண்கவர் தோட்டமுண்டு. இத்தோட்டத்தில் இயல்பாக உள்ள (Live tree) ஒருநத்தார் (Christmas tree) ஆண்டுதோறும் அழகு செய்யப்பட்டு, மின் விளக்குகள் பூட்டப்பட்டு மரத்தின் உச்சியில் ஒரு பெரிய நட்சத்திரம் வைக்கப் பெற்றிருக்கும். மார்கழி 18-ம் நாள் அதிகார பூர்வமாக ஜனுதிபதியினுல் இம் மின்விளக்குகள் ஒளியூட்டப்பெறும்.

இருனில் சிறைப்பட்ட இந்நாட்டு தூதரக மக்களுக்காக சென்ற ஆண்டு இந்தத் தேசிய நத்தார் மரம் (TheNational tree) ஒளியூட்டம் பெருது, இருளில் மூழ்கியது. இப்முறை ஜிம்மி காட்டருக்குக் கிடைத்த ஒரு தனியான நம்பிக்கையினுல் மரத்தின் உச்சியில் இருந்த நட்சத்திரம் மட்டுமே மாத்திரம் ஒளியூட்டப் பெற்றது, ஏனைய மின் விளக்குகள் இருளில் மூழ்கியன.

(இவை ஜிம்மி காட்டரின் தனித் திருவிளையாடல்கள் என்பது இந்தக் கட்டுரையாளரின் கருத்து)!

இந்தத் தேசிய மரத்தைச் சுற்றிவர, 50 சிறிய மரங்கள் உண்டு. இவை ஒவ்வொன்றும், இந்த நாட்டின் ஒவ்வொரு ஒவ்வொரு மாநிலத்தின் சின்னமாகக் காட்சிதரும், இப்படிப்பட்ட உணர்ச்சி நிறைந்த செயல்களினுலும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட சடங்குகளினுலும் இந்த நாட்டின் ஒற்றுமையைக் கட்டி வளர்க்க முனைகின்றுர்கள். இவற்றுக்கு ஓரளவு முக்கியத்துவம் கொடுக்கிறுர்கள்.

## மலர்ந்த ஆண்டு கசக்குமா? இனிக்குமா?

இப்பொழுது தென்றலில் நத்தார் மணம் குன்றிக் குறைகிறது. கடை தெருக்களில் விழாக்கோலங்கள் மறைகின்றன. விடுதலைக் காலம் சுருங்குகின்றது. பொங்கல் முடிந்த மறுவாரம் வெள்ளை மாளிகையில் புதிய ஜனாதிபதியின் குடியேற்றம்; ஆட்சி பீடத்தில் புதிய கட்சியின் பெரும்பான்மைச் செல்வாக்கு; ஆனால், மக்களின் ஏக்கம்; ''1981-ம் ஆண்டு எங்ஙனம் அமையுமோ?'' என்பது. அவர்களது ஏக்கத்திற்குக் காரணம் இல்லாமல் இல்லை.

ரஷ்ஷியாவின் அதிகார வெறி பிடித்த அவ்(f)கனிஸ்தான் ஆக்கிரமிப்பு; இப்பொழுது போலந்தைக் கொலைக்களமாக மாற்ற வெறிபிடித்து நிற்கும் ரஷ்ஷியாவின் ஆட்சிவெறி; இருக்கின் போர்க்கோலம்; மதத்தின் பெயரால் மக்களின் வாழ்க்கையைச் சிதைக்கும் இரானின் கொள்கையற்ற போக்கு; தென் அமெரிக்காவில் வெடித்துப் பிளக்கும் விடுதலைப் போராட்டங்கள்; அங்கு அடக்குவோருக்குக் காவடி எடுக்கும் அமெரிக்காவின் சுயநலப் போக்கு; உலக நாடுகளை, அதுவும் குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளைக் காவல்காக்க ''நீயோ—நானோ'' என்று போட்டியிடும் இருபெரும் காவல் நாய்களுக்கு எப்பொழுது விசர் பிடிக்குமோ என்ற பயம்; ஆபிரிக்க அரசியல் விளையாட்டுக்கள்; தென் ஆபிரிக்காவின் இனத்துவேஷம்; சீனாவின் புதியபோக்குகள்: இந்திராகாந்தி மீண்டும் இரும்பாகமாறி எதிர்ப்போரை எரிப்பாரோ என்ற சந்தேகம்; விடுதலைப் பாதையில் விபச்சாரம் செய்துவிட்ட கூட்டணியின் பழைய முருக்கைமர வேதாளக் கொள்கை... இப்படி ஒவ்வொரு நாட்டிலும் என்னென்ன நடக்குமோ ......... அதனால் எங்கெல்லாம் போர் மூளுமோ என்ற பீதியோடு 1981—ம் ஆண்டு பிறந்துள்ளது. இன்று 110 நாடுகளில் மனித அடிப்படை உரிமைகள் அதிகார பூர்வமாக — ஆட்சியில் உள்ளோரின் '' ஆசீர் ''வாதத்தோடு பறிக்கப்படுகின்றன.

தலைவர்களின் ஆட்சி வெறி கொண்ட விளையாட்டுக்களினால் துன்புறுவதும் வாழ்விழப்பதும் அப்பாவி மக்கள்—உங்களையும் என்னையும் போன்ற சாதாரண மக்கள். ஆனால், இதே சாதாரண மக்கள்தான் இத்தலைவர்களை உருவாக்குகிறார்கள் என்பது மறக்கமுடியாத உண்மை. அதனால், இச்சூழ்நிலையை மாற்றி அமைக்கும்சக்தி இந்த சாதாரண மக்களிடம் உண்டென்பது என்னுடைய அசைக்கமுடியாத நம்பிக்கை.

ஒரு சமூகம் விழித்துவிட்டால் ஒரு புதிய உலகம் உருவாகும் இந்த விழிப்பை நோக்கி வளர்வோம்—புதிய ஆண்டில் மேலும் விழிப்புறுவோம். இந்த விழிப்பைத் தூண்டி வளர்ப்பதுதான் ஓர் எழுத்தாளனின் முக்கிய பொறுப்புவாய்ந்த கடமையாகும். விழிப்போம்! 'புதிய உலகம்' படைப்போம்.




**நாவண்ணன்**

(சென்ற இதழ் தொடர்ச்சி)

**கந்தைகள் :** ஏன்

**பட்டிக் 1 :** இது எங்கடை

**பட்டிக் 2 :** இது எங்களுக்கு வேணும்

**பட்டிக் 3 :** இது எங்களுக்கே காணுது

**பட்டிக் 4:** இது எங்களுக்குச் செய்யிற வஞ்சகம்

**கந்தைகள் :** இவங்க எல்லாம் யார் ?

**பச்சை :** இவங்கள் என்ர மூத்த பிள்ளைகள் உங்களுக்கு அண்ணன்மார்.

**பட்டிக் :** இல்லை சொந்தமில்லை

**கந்தைகள் :** ஓம் சொந்தமில்லை

**கந்தை 1:** நீங்கள் வில்லங்கமாய் சொந்தமாக்கப் பாக்கிறியள்

**பட்டிக் 1 :** நாங்கள் இவங்களைச் சேர்க்க மாட்டம்

**கந்தை 2 :** எங்களுக்கும் விருப்பமில்லைத்தான், எண்டாலும் என்ன செய்யிறது

**பட்டிக் 2 :** இவங்கள் இண்டைக்கு வந்தவன்கள்

**பச்சை :** அது எனக்கும் தெரியும், உங்களுக்குத் தந்த மிச்சம் தான் அவைக்குப் பயப் படாதீங்கோ

**கந்தை 3 :** மிச்சம் தின்ன நாங்கள் வர இல்லை.

**பச்சை :** இஞ்சேர் விசர்க்கதை கதையாதை

**பட்டிக் 3 :** மிச்சம் தர எங்களுக்கும் விருப்பமில்லை

**கந்தை 4 :** பிந்தி வந்தாலும் இந்த நிலைமை வரமுந்தி நாங்களும் நல்லாய்ப் பிரயாசைப்பட்டனுங்கள், எங்களுக்கும் உரிமை இருக்கு.

**பட்டிச் 4:** உரிமையோ? எதில ? எங்க சொல்லு பார்ப்பம் ?

**கந்தை 1 :** ஏன் இந்தக் கோயில் கட்ட என்ர அப்புவும் கல்லுக் குடுத்தவர்.

**பச்சை :** கட்டுறவங்களுக்கேகோயில்சொந்தமில்லை

கந்தை 2 : எங்களுக்குப் பங்கு வேணும் எங்களையும் சேர்த்து மன்றுடுங்கோ.

கந்தை 3 : எங்களுக்கும் விளங்கக் கூடியதாய் மன்றுடுங்கோ.

பக்டிக் 1 ; விளங்காட்டி மூத்த எங்களை மாதிரி பேசப் பழகுங்கோ. பிறகு விளங்கும்.

கந்தை 4 : அப்பிடி வேண்டாம் உங்களோட நாங்கள் மன்றுடுகிறமாதிரி எங்களோட நீங்களும் மன்றுடுங்கோ, ஆண்டவரும் விரும்புவார்.

பட்டிக் 2 : வாயை மூடடா, எங்களோட மோதருய்.

கந்தை 1 : மோதருயோ? அவற்ற முகத்துவாரத்தைப் பார்.

பட்டிக் 3: எங்கட முகத்துவாரத்தைப்பற்றி நீ கதைக்காத போடா வெளியால.

கந்தை 2 : மாட்டம்.

பட்டிக் 3: நீங்கள் இஞ்ச நிண்டியள் எண்டால் எல்லாத்திலேயும் பங்கு கேப்பியள் போங்கோடா வெளியே

கந்தை 4 : மாட்டம் எங்களுக்கும் பங்கு இருக்கு.

பட்டிக் 4: அப்பு இவன்கள் வாயால சொல்லிச் சரிவரமாட்டான்கள். இவன்களை அடிச்சுக் கலைக்கட்டே.

பச்சை : மூத்ததுகள் உங்களுக்கு இல்லாத உரிமையா, அடியைப் போல அண்ணன் தம்பி உதவ மாட்டான். அடிச்சுக்கலை பிறகு அடங்குவான்கள்.

பட்டிக் : ஹையா...... (துள்ளிக் குதித்துக் கொண்டு) அப்புவுக்கும் சம்மதம், அப்புவுக்கும் சம்மதம், அப்புவுக்கும் சம்மதம். (துள்ளித் துள்ளி கந்தைகளை நெருக்கி ஓடுகின்றுர்கள்) அடிப்போம் அடக்குவோம், அடிப்போம், அடக்குவோம், அடிப்போம் அடக்குவோம்.

(அடிப்பது போல் அபிநயங்கள், கந்தைகள் அலறிக் கொண்டு கீழே விழுகின்றன) அடித்தோம் அடக்கினோம், அடித்தோம் அடக்கினோம் (என்று கூறிக் கொண்டு பட்டிக் எல்லாம் மேடையை விட்டுப் போகின்றன — பச்சையும் போகின்றது. பின்னர் கந்தைகள் எழுந்து மேடை எட்டு வடிவத்தில் சுற்றி வருகின்றன.)

கந்தை : அம்மா பசிக்குதே...... அம்மா பசிக்குதே....
அம்மா பசிக்குதே......
(இவ்வேளை மஞ்சள் சால்வை அணிந்தவரின் குரல் கேட்கின்றது)

குரல்: தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்
(கந்தைகள் பரக்கப் பரக்கப் பார்க்கின்றன.)

குரல் : தனி ஒருவனுக்கு உணவில்லை யெனில் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்......

கந்தை 1 : ஒரு ஆளுக்கெண்டாலும்

கந்தை 2 : உணவு கிடைக்காட்டில்

கந்தை 3 ; இந்த உலகமே அழியுமாம்

கந்தை 4 : அப்ப சாப்பாடும் கிடைக்கும், கட்டாயம் கிடைக்கும்.

கந்தைகள் : கட்டாயம் சாப்பாடு கிடைக்கும்........... (துள்ளி ஆடுகின்றன) சாப்பாடு...... சாப்பாடு...... சாப்பாடு...... (குரலுக்குரிய மஞ்சள் சால்வை மேடைக்கு வருகிறார்.)

(மஞ்சள் சால்வை நடுவிலே நிற்க கந்தைகள்இருவர் இருவராக இரண்டு பக்கமும் நிற்கின்றனர்.)

ம. சல்வை: கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து முன்தோன்றிய மூத்தகுடியே என்று தணியும் எங்கள் தாகம்.

கந்தை 1: தாகம் தணிய வேண்டுமாம்

கந்தை 2: அப்ப குடிக்கவும் கிடைக்கும்

ம. சால்வை: அமிழ்தம் எங்கள் மொழியாகும்

கந்தை 3 : அமிழ்தம்!

கந்தை 4 : திண்டால் பசியே இருக்காது!

கந்தைகள்: சாப்பாடு........... சாப்பாடு........... சாப்பாடு
(துள்ளி ஆடுகின்றன.)

ம. சால்வை நீங்கள் இங்கேயே நின்று கொண்டு சாப்பாடு கேட்டால் கிடைக்குமா?

கந்தை 1 : பிறகு எங்கை நின்று கொண்டு கேக்கிறது ?

ம. சால்வை: நாயும் பிழைக்கும் இந்தப் பிழைப்பு, நமக்கிது தேவையில்லை.

கந்தை 2 : எங்களுக்குப் பசிக்குதே.

ம. சால்வை: பசிச்சாலும் புலி புல்லுத் தின்னுமா ?

கந்தை 3 : புலி மிருகம், நாங்கள் மனுஷங்கள்...... பசிக்குதே..........

ம. சால்வை: அதுவும் நியாயம்தான், உங்கட பசியைப் போக்க ஒரே வழிதான் இருக்கு.

கந்தை 4 : சொல்லுங்க..... சொல்லுங்க......

ம. சால்வை: இந்த அந்நிய இடத்தில் நின்று கொண்டு, அடியும் வாங்கிக் கொண்டு பிச்சைச் சாப்பாடு தின்னக் கூடாது.

கந்தைகள் : அப்போ..... ?

ம. சால்வை: உங்களுக்கெல்லாம் சொந்த வீடு வளவிருக்கு.

கந்தை 1 : எங்களுக்கு?

கந்தை 2 : சொந்தமாக?

கந்தை 3 : வீடும்?

கந்தை 4: வளவுமா ?

ம. சால்வை: உங்களுக்கு என்று நான் புறிச்சுச் சொல்லுகிறது சரியில்லே. எங்களுக்கு, என்னையும் சேர்த்துத்தான் சொல்லுறன். எங்கட வீடு வளவெல்லாம் இருக்கிற போது நாங்கள் ஏன் இப்படி நடுத்தெருவில நாயாய் அலைய வேண்டும்?

கந்தை 1 : எப்ப துவங்கி இந்தக் காணி இருக்குது ?

ம. சால்வை: அப்பவே துவங்கி.

கந்தை 2 : இப்ப ?

ம. சால்வை: வேறை ஆட்கள் இருக்கினம்

கந்தை 3: இவளவு காலமும் விட்டிட்டு இப்ப கேட்டால் தருவாங்களா ?

ம. சால்வை: விசரன்மாதிரிக் கதைக்கிறாய்; எங்கட வீடு வளவில் நாங்கள் போய் இருக்கிறதுக்கு யாரிட்டக் கேக்க வேணும்?

(தொடரும்)

# இலங்கைத் தமிழர் வரலாறு

★ கலாநிதி பத்மநாதன்

இலங்கை வாழ் தமிழ் மக்களின் வரலாற்றைப்பற்றி அறிவதற்கு ஒரு சில பிரச்சினைகள் எமக்கு முட்டுக்கட்டையாக விளங்குகின்றன. பல்கலைக் கழக மாணவர்களுக்கு வரலாறு கற்பிக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியமையின் காரணமாகச் சில வரலாற்று உண்மைகளைப் பற்றி அறிந்து கொள்ளும் சந்தர்ப்பம் எனக்கு வாய்த்தது.

கிரேக்க, ரோம பாரம்பரியங்களில்தான் வரலாற்றுச் சம்பவங்களைத் தொகுத்து எழுதும் மரபு தோன்றலாயிற்று. இம்மரபு பின்னர் ஏனைய நாடுகளுக்கும் பரவிற்று. கிரேக்க நாட்டில் மட்டுமே கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில் ஏரோதத்தஸ் போன்றோர் யதார்த்த ரீதியாகச் சில நிகழ்ச்சிகளை எழுதி வைத்தனர். இவை யாவும் மொழி அடிப்படையிலும் பண்பாட்டு அடிப்படையிலும் எழுதப்பட்டிருப்பதைக் காணலாம்.

ஆசிய, சீன நாடுகளின் நாகரீகத்தின் தனித்தன்மை கி. பி. 10-ம் நூற்றாண்டிலிருந்து இன்று வரை நிலைநாட்டப்பட்டு வருகின்றது. இவற்றின் செல்வாக்கு 10-ம் நூற்றாண்டுக்குப் பின்பு தென் கிழக்கு நாடுகளுக்குப் பரவிற்று. அராபிய நாடுகளில் எழுச்சி ஏற்பட்டதையடுத்து உலகில் இஸ்லாமிய இனம் பரவிற்று.

வரலாற்று மரபுகளைத் தொகுத்து வைக்கும் பாரம்பரிய வழக்கு பின்னர் ஆசியா, மேற்காசியா, பாரசீகம், இந்தியா ஆகிய நாடுகளுக்கும் பரவியது. யூதர் மத்தியிலும் வரலாற்று மரபுகள் காணப்படுகின்றன.

தமிழ் இலக்கியத்தில் வரலாற்று மரபும் வரலாற்று இலக்கியங்களும் வளர்ச்சியடையவில்லை அவை அரசியல் பண்பாட்டிலிருந்து வீழ்ச்சியடைந்திருப்பதைக் காணலாம்.

தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் தேசிய வாதத்தின் யுகமாகிய 20-ம் நூற்றாண்டின் ஆரம்பம் முதல் அவர்களின் வளர்ச்சி ஒரு பூரணத்துவத்தை நோக்கிச் செல்வதைக் காணலாம். எனினும் இந்தத் தேசிய வாதத்தை ஆட்சியாளர்கள் இன்னமும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. சமகால அரசியல் நிலைகளையும் இவர்கள் புரிந்துகொள்ளத் தவறிவிட்டத

ளுல் எமது சமுதாயம் வீழ்ச்சி யடைந்துள்ளது. இதன் விளை வாகத்தான் எமது மரபுகள் வர லாற்றில் ஒரு முக்கிய அம்சமாக இடம் பெறவில்லை.

இலங்கையைப் பொறுத் தளவில் புராதன வரலாற்று உண்மைகளை அறிவதற்கு ஒரு சாதனமாக விளங்குவது மகா வம்சம் என்னும் நூல் ஆகும். இந்நூல் 18-ம் நூற்றுண்டுவரை சிங்கள இராச்சியங்ளின் வர லாற்றைப் பற்றிக் குறிப்பிடு கிறது,

இலங்கை ஒரு நாடு. எனினும் இங்கு இரு தேசிய இனங்கள் வாழுகின்றன. 14-ம் நூற்றுண் டில். அதாவது இலங்கை அந்நிய ஆட்சிக்கு உட்பட்டிருந்த காலத் தில் அரசியல், சட்ட, பூகோள, பண்பாட்டு ரீதியில் மாற்றங்கள் பல ஏற்பட்டன. இக்காலப்பகுதி யில் இலங்கையின் வரலாற்று அடிப்படையில் தமது நிர்வா கத்தை வகுத்தனர்.

அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த ஒல்லாந்தர் இப்பகுதியில் நிலவிய மரபுகளை மேலும் வலுப்படுத்தி அவற்றின் அடிப்படையில் தங் கள் சட்டத் தொகுப்புகளை உரு வாக்கினர். இதனுல் இந்நாட் டின் இரு தேசிய இனங்களின் உறுதிப்பாட்டையும் வரையறுத் தனர். இவர்களையடுத்து ஆட்சி செலுத்திய பிரித்தானியர் முன் னர் நிலவிய சட்ட மரபுகளையே தாங்களும் பின்பற்றி ஆண்ட னர். 19-ம் நூற்றுண்டின் நடுப் பகுதி வரை சிங்களப் பகுதி வேறுகவும் தமிழ்ப் பகுதி வேறுக வுமே பிரிக்கப்பட்டிருந்தன.

> வாழ்க்கையை வருடங்களால் கணக்குப் பார்க்காதீர்கள். இதயத் துடிப்புகளால் கணக் கிட்டுப் பாருங்கள்.
>
> —பெய்லி

போத்துக்கேயரின் வருகைக்கு முற்பட்ட காலத்தில் நிலவிய மரபுகளையும் வரலாற்று உண்மை களையும் விரிவாக, தெளிவாக அறிந்துகொள்ள முடியாத நிலை இருந்தது.

இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சி புரிந்த காலத்தில், 19-ம் நூற்றுண்டின் முதல் 10 தசாப் தத்தில் வகுக்கப்பட்ட இலக்கி யங்கள் ஊடாக வரலாற்று உண் மைகளை அறிவதற்கு வில்லியம் கெய்கர் போன்ருேர் முற்பட்ட னர்.

இதனுல் இலக்கிய வரலாறு களில் பாரபட்சம் காணப்படு வதை அறிய முடிகிறது. இலங் கையின் வரலாற்றை ஆராயப் புகுந்த மேல் நாட்டவர்கள் தங் கள் ஆராய்ச்சிகளுக்கு ஆதார மாக புதைபொருட்கள், ஆவ ணங்கள், பிரகடனங்கள், என்ப வற்றைத் துணையாகக் கொண்ட

தோடு, வாழ்க்கை முறை, நகர அமைப்பு, வாணிப முறை, அகழ்வுகள், போன்றவற்றையும் ஆராய்ந்தனர். ஆனாலும் இவற்றின் மூலம் வெளியாக்கப்பட்ட தகவல்கள், கண்டறிந்த உண்மைகளை நிலைநாட்டுவதற்கு நன்கு பயன்படுத்தப்படவில்லை என்றே கூறவேண்டும்.

தற்காலத்தில் புதைபொருள் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப் பட்ட போதிலும் அந்த ஆராய்ச்சிகளின் முடிவுகளைக் கொண்டு எமது வரலாற்று உண்மைகளைக் கண்டுகொள்ள முடியாத நிலையில் உள்ளோம். காரணம் புதைபொருள் ஆராய்ச்சியையடுத்து அறிக்கைகள் எழுதப்படும் முறை இப்பொழுது கைவிடப்பட்டுள்ளது. மேலும் கடந்த மூன்று தசாப்தங்களாக புதைபொருள் ஆராய்ச்சிகள் பற்றிய உண்மைகள் பல கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றன.

நாணயங்களிலிருந்து அறியக் கூடிய வரலாற்று உண்மைகளும் வெளியிடப்படாமலேயே இருக்கின்றன. யாழ்ப்பாண மாலை போன்ற நூல்களிலிருந்து தமிழர் மரபை அறியக் கூடியதாயிருந்தும் அவை நன்கு பயன்படுத்தப் படவில்லை. சுவாமி ஞானப்பிரகாசர் அடிகளாரே முதன்முறையாக இந்நூலிலிருந்து தமிழர் மரபுகளை ஆராய முற்பட்டார்கள். எனினும் இவருக்குப் பின் இவர் மேற்கொண்ட முயற்சிகள் தொடர்ந்து பின்பற்றப்படவில்லை.

இலங்கை மக்களின் பூர்வீக வரலாற்றை அறிவதற்குத் துணையாக இருக்கும் ஒரேயொரு நூல் மகாவம்சம் ஆகும். பல ஜாதகக் கதைகளின் மூலமாக இதில் சிங்கள மக்களின் தோற்றம் விவரிக்கப்படுகின்றது. வேறு நாடுகளிலும் இதுபோல கதைகளின் மூலம்; குறிப்பிட்ட ஒரு இனத்தின் உற்பத்தி வரலாறு எடுத்துரைக்கப்படுகிறது. வரலாறு பற்றிய சரியான சான்றுகள் கிடைக்காதவிடத்து இலக்கிய ஆசிரியர்கள் இதில் ஒரு சில புனைக் கதைகளையும் புகுத்தியுள்ளனர். இந்த உண்மைக்கு ஜி. சி. மெண்டிஸ் அவர்களின் கூற்றுக்கள் சான்று பகர்கின்றன. எனினும் 1954-ம் ஆண்டின் பின்னர் எம் நாட்டில் ஏற்பட்ட தேசிய எழுச்சியையடுத்து இந்த உண்மைகள் புறக்கணிக்கப்பட்டு, வரலாற்று உண்மைகளாக மரபுவழி வந்த கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டன.

அசோகன் காலத்தில், தேரவாத பௌத்த மதம் இங்கு பரப்பப்பட்ட பொழுது இந்நாட்டில் வட இந்திய மொழியும் புகுத்தப்பட்டது. இதன் விளைவாகத் தான் சிங்கள மொழி வளர்ச்சி பெற்றது. இந்தக் காலத்தில் இங்கு வாழ்ந்த மக்கள் மனிதர்கள் அல்லவென்று மகாவம்சம்,

ஈவவம்சம் போன்ற நூல்கள் குறிப்பிடுவதைக் காணலாம். இவர்கள் வளர்ச்சியடையத் தொடங்கிய பின்னரே இவர்களின் நாகரிகம் வளர்ந்தது. இவர்கள் நாகர் எனப்பட்டதாகவும், இன்னொரு இனத்தவர்கள் யக்கர் எனப்பட்டதாகவும், கருதப்படுகிறது. யக்கர் என்பார் யார் என்று தெரியாதபோதிலும் இவர்கள் திராவிட மொழி பேசும் ஒரு கூட்டத்தவர்கள் என்று குயிக்சந்தர் என்பவர் கூறுகின்றார்.

பூர்வீகக் காலத்தில் இலங்கையில் தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. உதாரணமாக மகாவம்சம், கிறிஸ்துவுக்கு முற்பட்ட

> நாமெல்லாம் வாழ்கிறோமா? யார் சொன்னது? வாழலாம் என்ற நம்பிக்கையிலே தான் இருக்கிறோம்.
>
> — வோல்டையர்

காலத்தில் தமிழர் இலங்கையைக் கைப்பற்றி அநுராதபுரத்தில் ஆட்சி செய்ததாகக் குறிப்பிடுகிறது அபரணை, கந்தரோடை, ரம்புக்கணை, கதிர்காமம் போன்ற இடங்களில் இந்தியப் பண்பாடுடைய மக்கள் வாழ்ந்தார்கள் என்பதற்குச் சான்றுகள் உள்ளன.

எஸ். பி. எவ். சேனரத்ன என்பவர், இலங்கையில் பௌத்த நாகரிகம் பரவிய காலத்தில் தென் இந்தியப் பண்பாடு (பெருங்கல் பண்பாடு) பரவியிருந்ததாகக் கூறுகின்றார். (அதாவது ஒருவர் இறந்ததும் அவரது உடைமைகள் அனைத்தையும் ஈமத்தாலியில் வைத்து புதைக்கும் வழக்கம்). இதன் அடிப்படையில் ஆராயப்புகின் இலங்கையின் மேற்கு, கிழக்குக் கரையோரங்களில் தமிழர்கள் பரவியிருந்ததாகக் கருதலாம். இதற்கு ஆதாரமாக, இப்பகுதியில் 200க்கும் மேற்பட்ட ஈமத்தாலிகள் கண்டெடுக்கப்பட்டதைக் குறிப்பிடலாம். ஆனாலும் இவற்றைப் பற்றிய உத்தியோக பூர்வமான ஆதாரங்கள் வெளியிடப்படவில்லை.

இலங்கையிற் பரவியிருந்த பெருங்கற் பண்பாடு இந்தியாவில் காணப்பட்ட ஒன்றாகும். பெருங்கற்பாடு வளர்ச்சி பெற்றமை, தென் இந்தியாவில் காணப்பட்ட பயிர்ச் செய்கை முறை, இடப்பெயர்கள் இங்கும் காணப்படுவதிலிருந்து தெரியவருகிறது.

பௌத்த சமுதாயம் இங்கு தோற்றியதையடுத்து, மேற்கிந்திய சந்ததியினர் சிங்களத்தைத் தமது தாய்மொழியாக ஏற்றுக் கொண்டிருக்கலாம்.

விஜயனைப் பற்றிய கதையை நாம் பூரணமாக ஏற்றுக்கொள்ள முடியாது. விஜயன் வங்காளத்தி லிருந்து வந்ததாகக் கூறப்படு கிறது. சிலர், விஜயம் குஜராத்தி லிருந்து வந்ததாகக் கூறுவர். எனினும், வட இந்தியா, தென் கிழக்கு, அல்லது வட கிழக்கிலி ருந்து வந்ததாக ஏற்றுக்கொள்ள முடியும்.

இது விடயமாக சுவாமி ஞானப்பிரகாச அடிகளாரின் கருத்துக்கள் நிராகரிக்கப்பட்டு விட்டன. அதேபோல இலங்கை யில் வரலாற்று ஆசிரியர்களுக்கும் சுயமாக சிந்திக்கும் ஆற்றல் உணர்வு இல்லையாதலால் வர லாற்று உண்மைகள் பல சிதைந்து போயிருக்கக் கூடும்.

பௌத்த சமுதாயம் எமது நாட்டில் ஏற்பட்டதன் பாதிப்பி னல் புராதன தமிழர்கள் பிரா கிருத மொழியைத் தழுவிக் கொண்டார்கள். இதனலேயே ஆரம்பத்தில் பெயர்கள் மட்டு மல்லாது சிங்கள நாகரிகமும் தமிழரிடையே புகுந்தது.

அநுராதபுரக் காலத்தில் இலங் கைக்கும் தென் இந்தியாவிற்கும் இடையே தொடர்பு இருந்தது. கைத்தொழில், வாணிபம், முத் துக்குளிப்பு, என்பன காரண மாகப் பெருந் தொகையான தமிழர்கள் இலங்கைக்கு வந்து குடியேறினர். இவர்கள் பிரா கிருத வழக்கினல் ஆட்கொள்ளப் பட்டனர்.

கி. பி. 7-ம் நூற்றுண்டளவில் இலங்கைக்கு வந்த இந்தியத் தமிழர்கள் இலங்கையின் அரசிய விலும் பங்குகொள்ளத் தொடங் கினர். மலையாள மன்னர்கள் சிங்கள மக்களை அழைத்துத் தங் கள் இராணுவத்தில் சேர்த்துக் கொண்டதாகவும் கூறப்படுகி றது. பல்லவ, பாண்டிய சாம் ராச்சியங்கள் எழுச்சி பெற்ற காலங்களில் இலங்கையில் தென்னக செல்வாக்கு ஏற்பட்டு தென்னக எழுத்து முறை, சிற்பக் கலை என்பன இங்கும் பரவிற்று. உதாரணமாக இசுருமுனி ஓவியம் பல்லவ பாணியில் அமைந்திருப்ப தைக் கூறலாம். 7-ம் நூற்றூண் டில் வைதீக மறுமலர்ச்சி ஏற் பட்ட காலத்தில் இலங்கைக்குத் தென் இந்தியாவிலிருந்து வந்த மக்கள் இங்கு தங்கள் செல் வாக்கை நிலைநாட்ட முற்பட்ட னர்.

சோழர் காலத்தில் இலங்கை ஈழமண்டலம் என பெயர் பெற்றி ருந்ததோடு சோழ சாம்ராச்சியத் தின் 9 ராச்சியங்களுள் ஒன்ருக வும் விளங்கிற்று.

---

வாழ்க்கையிலே இரு பகுதிகள் உண்டு.
கடந்தகாலம் — ஒரு கனவு;
வருங்காலம் — ஒரு பெருமூச்சு! —அராபியப் பழமொழி

# 5-வது
# உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுபற்றி நான் கூறுவதானல்........!

★ அருட்திரு கில்லறி ஜெபநேசன்



அருட்திரு கில்லறி ஜெபநேசன் அடிகளார் யாழ்ப்பாண மறைமாவட்டத்தைச் சேர்ந்தவர். நிறைந்த தமிழ்ப்பற்றும், கலைஆர்வமும் கொண்டவர். இவரது ஊக்குவிப்பால் முன்னேறியுள்ள இளங்கலைஞர்கள் பலர். இவர் மன்னரில் பங்குத் தந்தையாகப் பணியாற்றியபோது மன்னர் தமிழ்ச்சங்கத்தின் தலைவராக மூன்று வருடங்கள் பணியாற்றினர் பின்னர் கனடாசென்று குடும்ப மேய்ப்புப் பணியில் எம். ஏ. பட்டம் பெற்றுள்ளார். கலிபோர்னியாவில் ஒருவருடம் பங்குப்பணிப் பயிற்சிபெற்று நாடு திரும்பியுள்ளார் தற்பொழுது சில்லாலையில் பங்குத் தந்தையாகப் பணிபுரியும் இவர், மதுரையில் நடந்த ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டைப் பார்வையிடச் சென்றுர். இந்த மாநாட்டில் அவர் கண்டு கேட்டு அனுபவித்தவைகளை இங்கு தருகின்றுர் படத்தில் அருட்திரு ஜெபநேசன் அடிகளார் தனிநாயகம் அடிகள் சிலை திறப்புவிழாவில் உரை நிகழ்த்துவதையும், தலைவர் நெடுமாறன், தமிழ்நாடு கல்வி அமைச்சர் அரங்கநாயகம் ஆகியோர் இருப்பதையும் காண்க.

8

ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடே அலாதியானது தான் தமிழ்மீது. தமிழருக்குள்ள பற்றையும், தமிழர் அல்லாதோருக்குக் கூட உள்ள மதிப்பை எடுத்தியம்பிய ஒரு பெருவிழா... தமிழுக்கும் தமிழருக்கும் பெருமைதேடிக் கொடுத்த திருவிழா... இப்பெருங் கைங்கரியத்தை தமிழ்நாடு...... இன்னும் பச்சையாகச் சொல்லுவதானல் எம். ஜி. ஆர் அரசு சாதித்துள்ளது என்றே கூறவேண்டும்.

ஈழத்தில் இருந்து சென்ற எமக்கு இராமேசுவர இறங்கு துறையிலேயே ஏகப்பட்ட

வர

வேற்புகள், மாலை மரியாதைகள். இத்தகைய தமிழனுக்கே உரித்தான, பண்பான வரவேற்பு வெளிநாட்டு பிரதிநிதிகளுக்கெல்லாம் கிடைத்தது.

திரும்பிய திசையெல்லாம் அலங்காரங்கள்—வண்ண விளக்குகளில் ஒளி ஜாலங்கள் நாம் வேறெங்கோ உலகத்தில் இருப்பது போன்ற உணர்வையே ஏற்படுத்தின. தாய்த் தமிழுக்கு தமிழன் எடுக்கும் பெருவிழாவை எண்ணி ஒவ்வொரு தமிழனும் பெருமைகொள்ள வைத்தது......

ஆனல் இந்தப் பெருமையும், உணர்வும்மாநாடு முடிந்தகட்டத்தில் இருந்தா என்பது ஒரு வினக்குறிதான்!

தமிழாராய்ச்சி நோக்கோடு எடுக்கப்பட்ட இவ்விழா இன்றைய தமிழ் நாட்டு அரசின் பெருமை கூறும் பெருவிழாவா என்ற கேள்வி வெளிநாடுகளில் இருந்துசென்ற எம்போன்ருேரின் மனங்களில் எழுந்து நின்றது.

தமிழ் அறிஞர்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் கொடுக்கப்பட்ட முக்கியத்துவத்தை விட தமிழ்நாட்டு அமைச்சர்களுக்கும் அரசியல் வாதிகளுக்கும் அளிக்கப்பட்ட முக்கியத்துவமும் கெளரவங்களும் முதன்மை வாய்ந்திருந்தமை வேதனையைக் கொடுத்தது.

ஆரம்பவிழாவிலேயே அரசியல் காற்று வீசத் தொடங்கிவிட்டது. இலங்கை எதிர்க்கட்சித் தலைவரின் பேச்சைத் தொடர்ந்தே இது தீவிரமாக இருந்தது என்ருலும் இங்கு இருந்து சென்ற தமிழ் அமைச்சர்களே ஆரம்பித்துவைத்தார்கள் என்பதும் தவருகாது.

இலங்கையில் நடந்த 4-வது தமிழாராய்ச்சி மாநாட்டின் படுகொலைகள் பற்றியும் அதன் பிறகு தமிழர் பெற்ற மனநிலைகள், முடிவுகள் பற்றியும் இம்மாநாட்டு ஆரம்ப விழாவில் அமிர்தலிங்கம் பேசியிருக்கக்கூடாதுஎன்போரும், தக்க சமயத்தில் தகுந்தஇடத்தில் அவர் கூறியுள்ளார் என்போரும் இருக்கவேசெய்தனர்.

4வது மாநாட்டின்போது உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தியிருக்கலாம் என்பது இலங்கைத் தமிழரின் கருத்து என்ருலும் அதுபற்றி எனது கருத்தைக் கூறுவதை விட, தமிழாராய்ச்சி மாநாட்டின் அத்திவாரக்கல்லான காலஞ்சென்ற தவத்திரு தனிநாயக அடிகளாருக்கு இம்மாநாட்டில் முக்கியத்துவம் கொடுக்கப் படாதது என் மனதுக்கு பெருங் குறையாகவே தோன்றியது. தமிழாராய்ச்சி மாநாட்டை ஆரம்பித்து வைத்து, உலகத் தமிழரை ஒன்று கூடவைத்தவரே தனிநாயகம் அடிகளார் தானே! 6-ம் திகதி இடம்பெற்ற சிலை திறப்பு விழாவிலும் அதன் பின்னர் அங்கொன்றும் இங்கொன்றுமாக இடம்பெற்ற சிறு குழு நிகழ்ச்சிகளிலும் மட்டுமே அவரைப் பற்றிப் பேசப்பட்டது, தனி

நாயகம் அடிகளார்க்கு, தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் தந்தையான அவருக்கு அமைப்பு ரீதியிலான இடத்தைக் கொடுக்கவில்லை.

மாநாட்டின் ஆரம்பத்தின் போது அடிகளாருக்கு நினைவாஞ்சலி செலுத்தியிருக்கலாம். அல்லது ஊர்திகளில் அண்ணா, பெரியாருக்கு கொடுத்திருந்தது போன்ற ஒரு இடத்தை இவருக்கும் கொடுத்திருக்கலாம், அன்றேல் வெளியிட்ட மாநாட்டு மலரிலாவது அவரது புகைப்படத்திற்குத் தனியாக ஒரு பக்கத்தைக் கொடுத்து அவரைக் கௌரவித்திருக்கலாம். 126 புலவர்களின் புகைப்படத்துடன் இவரது படத்தையும் சேர்த்திருந்தது, ஏதோ கடமைக்குச் சேர்த்திருப்பது போன்றே தோன்றுகிறது.

தனிநாயகம் அடிகளாரின் சிலை அண்ணா நகரில் அன்னை வேளாங்கண்ணி ஆலயத்துக்கு அண்மையில் நிறுவப்பட்டுள்ளது. தமிழ்நாடு கல்விஅமைச்சர் அரங்கநாயகம் சிறப்புவிருந்தினராகக் கலந்து கொள்ள, திரு. நெடுமாறன் தலைமை வகித்திருந்தார். இவ் விழாவில் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கத்தின் தமிழ்த்தாய் வணக்கம் அனைவரது உள்ளத்தையும் கவர்ந்தது. திரு. அமிர்தலிங்கமும் உரையாற்றினார் என்னையும் உரைநிகழ்த்தும்படி கேட்டுக்கொண்டார்கள். அடிகளாரின் தமிழ்த்தொண்



மதுரை தமிழாராய்ச்சி மாநாட்டில் நிறுவப்பட்டுள்ள தனிநாயகம் அடிகளாரின் உருவச்சிலை

டுக்கு மட்டுமே மற்றவர்கள் முக்கியத்துவம் கொடுத்திருந்தமையால், ''அவருக்கு தமிழும் கிறிஸ்தவமும் இருகண்களாக இருந்தன. அவர் தமிழ் அறிஞர் மட்டுமல்ல ஓர் உத்தம துறவியாகவும் இருந்தார். அவர் மேற்கொண்டிருந்த அந்த உத்தம துறவுதான் தமிழுக்கு இத்தனை பணிபுரியும் வல்லமையைக் கொடுத்தது'' என்பதையே எனது பேச்சில் நான் சிறப்பாகக் குறிப்பிட்டிருந்தேன்.

அரசியல்வாதிகளுக்கு அளிக்கப் பட்ட முக்கியத்துவம் அறிஞர்களுக்குக் கொடுக்கப்படவில்லை யென்று, நான் முன்பே குறிப்பிட்டிருந்தேன். இதன் தாக்கங்களை மூவேந்தர் அரங்கில் இடம்பெற்ற கலை நிகழ்ச்சிகள், பட்டிமன்றங்கள், கவியரங்கங்களில் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. எந்தவொரு சிறப்பான நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் ஒரு அமைச்சர் இடையில் வருவார்—உடனே ஒரு பரபரப்பு..... அந்த நிகழ்ச்சியின் சுவையே கெட்டுப்போகும் அளவுக்குத் தடை...... குழப்பம் ..

மேலும் ஆச்சரியப்பட வேண்டிய அம்சம் என்னவென்றால், மாநாட்டு அறிஞர்கள், கவியரங்கத்தில் பங்குபற்றிய கவிஞர்கள் கூட....... முதலில் இறைவணக்கம், பின்னர் தமிழ்த்தாய்வணக்கம், பின்னர் எம். ஜி. ஆர். வணக்கம் கூறியே தமது பேச்சையோ, கவிதையையோ ஆரம்பித்தது...... அதிலும் இலங்கையில் இருந்து வருகைதந்திருந்த அமைச்சர் ஒருவரே எம். ஜி. ஆரை உலகத் தமிழர்களின் தலைவன் என்று உயர்த்திப் பேசியதை எத்தனைபேர் இதயபூர்வமாக ஏற்றிருப்பார்கள் என்பது எனக்குள் எழுந்த வியப்புக் கலந்த வினவாகும்.

அதிலும் கட்சிச் சார்புள்ளவர்களே பெரும்பாலும் இவற்றில் கலந்துகொண்டிருந்த படியாலே எம். ஜி. ஆர். புகழ்மாலைகள் அந்தளவுக்கு இருந்தன. இந்த அரசியல் செல்வாக்குப் படைத்த கலைஞர்கள் — கவிஞர்களுக்கு சலுகைகள் வழங்கப் பட்டதன்காரணத்தாலோ என்னவோ எல்லாக்கவிஞர்களும் தமிழ் நாட்டில்பொறுக்கி எடுக்கப்பட்ட சிறந்த கவிஞர்கள் என்று கூற முடியாத அளவுக்கு எல்லாக் கவிதைகளும் திறமாகக் காணப்படவில்லை.

காமராஜர் பல்கலைக் கழகத்திலே 7-ம் திகதி கருநாடக இசை பற்றிய ஓர் ஆய்வுக் கட்டுரை

படிக்கப்பட்டபோது இடம் பெற்ற சம்பவத்தைக் குறிப்பிட வேண்டும். அங்கு, எமது இலங்கைக் குழுவின் தலைவராகச் சென்றிருந்த கலாநிதி சச்சிதானந்தம் அவர்கள் துணிவோடு ஒரு கருத்தை எடுத்துக் கூறினார்.

"இலங்கையில்நடந்த மாநாட்டில் தரமான ஆராய்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. ஆராய்ச்சிக் கட்டுரைகள் பதவிக்கு, பட்டத்துக்கு, பணத்துக்கு மதிப்பளித்து தெரிவு செய்யப்படுதல் கூடாது. தரம் ஒன்றை மட்டுமே வைத்து தெரிவு செய்யப்படல் வேண்டும். இதை இலங்கைப் பிரிதிநிதிகள் சார்பில் கூறுகிறேன்" என்று கூறினார். இவரது இந்தக் கருத்துக்கு எவருமே பதில் கூறவில்லை என்பது இங்கு குறிப்பிடக் கூடியதாகும். இலங்கையில் இருந்து தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு வருகை தந்திருந்த பல அறிஞர்களின் தரமான ஆராய்ச்சிக் கட்டுரைகள் ஏற்றுக்கொள்ளப் படாமல் புறக்கணிக்கப்பட்டதாகவும், அவர்கள் மனமுடைந்து உடனே இலங்கை திரும்பியதாகவும் பின்னர் கேள்விப்பட்டேன்.

இலங்கை மாநாட்டின் போது வெளிநாட்டு அறிஞர்களுக்கு அளிக்கப்பட்ட கௌரவம் மதுரையில் கொடுக்கப்படவில்லை யென்பது பலரின் கருத்து. இலங்கையில் அவர்கள் எதுவித சிரமத்தையும் பெற்றிருக்க வில்லை. ஆனால் மதுரை மாநாட்டின்போது அவர்கள் ஒரு சுதந்திரமற்ற நிலையில் நடாத்தப் பட்டதுபோல் தோன்றியது அவர்களுக்கு தங்குமிட வசதி செய்துகொடுக்கப்பட்டிருந்தது காமராஜர் பல்கலைக் கழகத்தில்.உணவு வசதி செய்து கொடுக்கப்பட்டது. 4 மைல்களுக்கப்பாலிருந்த பாண்டியன் ஹொட்டலில் சாப்பாட்டு நேரத்தில் பஸ் வண்டிகளில் அழைத்துச் செல்லப் படுவார்கள் — அங்கேயும் கைதிகள் போல சாப்பாட்டுத் தட்டுகளுடன் 'கியூ'வில் நின்று சாப்பாடு வேண்டி உண்ணவேண்டிய நிலையிலிருந்ததாம். இந்த வரிசைகளில் எமது நாட்டுப் பேராசிரியர்களும் கலாநிதிகளும்நின்றார்களாம். அந்தச் செய்திஎனக்குமிகவும்வேதனையளித்தது. இந்த அறிஞர்களுக்கு ஏற்பட்ட அனுபவம் அரசியல் வாதிகளுக்கு இருந்திருக்காது.

தமிழாராய்ச்சி மாநாட்டுக் கண்காட்சியில் எம். ஜி. ஆர். அரசின் அபிவிருத்தித் திட்டங்களும் சேவைகளும் பற்றியும், குடும்பக் கட்டுப்பாடு பற்றியும், குடும்பக் கட்டுப்பாட்டுக் கருவிகள் சாதனங்கள் பற்றியும் காட்சிப்பொருட்கள் தேவையானவை தானா என்ற கேள்வியும் என்னுள்ளே எழுந்தது.

தமிழனுக்கு இரத்தத்தில் ஊறிய வியாதியான, நிகழ்ச்சிகளை குறித்த நேரத்துக்குத்தொடங்காமை இங்கும் இருந்தது. இது பல

பேரை பட்டினியில் வாட்டி யெடுத்து விட்டது. பலமணி நேரம் காத்திருக்க வைத்தது,

★ தமிழ் ஆராய்ச்சிக்கு அப்பாலே எம். ஜி. ஆரின் அரசியல் செல்வாக்கை உலகறியச் செய்யும் ஒரு திட்டமிட்ட மாநாடு என்பது போல விழாவின் இறுதி நாள் நிகழ்ச்சி இருந்தது.

அன்றுதான் இந்திராகாந்தி அம்மையார் தமிழகத்துக்கு வருகை தந்திருந்தார். அன்று அம்மையாரை வரவேற்றது தவிர வேறு எந்த நிகழ்ச்சியுமே இடம் பெற

# கருத்து மோதல்—அடுத்த போட்டி

**மலையகத் தமிழருக்கு வளமான எதிர்காலம்**
**— மலையகத்தில் மட்டுமே உண்டு.**
**— மலையகத்துக்கு வெளியாலேயே உண்டு.**

இவற்றிற்குச் சாதகமாகவும், பாதகமாகவும் தோன்றும் உங்கள் கருத்துக்களை எழுதி அனுப்புங்கள்.

**விதிகள் :**

★ தயவுசெய்து தெளிவாகவும், ஒழுங்காகவும் எழுதி அனுப்புங்கள்.

★ ஒருவரே சாதகமாகவும், பாதகமாகவும் வாதங்களை ஒருங்கிணைந்து எழுதக்கூடாது.

★ பங்குனித் திங்கள் பதினைத்தாம் (15–3–81) நாளுக்குமுன்னர் உங்கள் வாதத்தை அனுப்புங்கள்.

★ சிறந்த வாதங்களுக்கு இருசார்பிலும் பரிசுகள் உண்டு.

★ தகுந்த ஆதாரங்களுடன் சுருக்கமாக ஆனால் – தெளிவாக இருபக்கங்களுக்கு மேற்படாமல் முழுத்தாளில் (13"× 4") உங்கள் வாதத்தை (கூடுமானல் ஒரு பக்கத்தில் மட்டும்) வரைந்து அனுப்புங்கள்.

★ ஆக்கங்கள் அனைத்தும் கருத்துமோதல், புதிய உலகம், த. பெ. எண் 2, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கே அனுப்ப வேண்டும்.

வில்லை. கண்காட்சிகள்கூட மூடப்பட்டன. பொதுமக்கள் அனைவரும் மூவேந்தர் அரங்கத் திடலுக்கு வரும்படி அழைக்கப்பட்டனர். இலட்சோப இலட்ச மக்களையும் ஒன்றாகக் கூட்டிக் காட்டுவதன் மூலம் தனக்கு தமிழ்நாட்டில் உள்ள செல்வாக்கை அம்மையாருக்கு காட்டுவதற்காகத்தான் எம். ஜி. ஆர். இப்படிச் செய்தாரோ என்ற சந்தேகம் பலருக்கு ஏற்பட்டது.

எது எப்படியிருப்பினும் எம். ஜி. ஆரைப் பொறுத்த வரையில் அவருக்கு ஒரு மாபெரும் வெற்றி. கருணாநிதியின் அனுதாபிகள் கூட கருணாநிதியின் மீது குறை கூறிய அளவுக்கு அவர் திறமையாகத் திட்டமிட்டுச் செய்து தமிழக மக்களிடையே தனக்கு உள்ள ஆதரவை மேலும் வளர்த்துக் கொண்டார்.

பிற இடங்களிலிருந்து சென்றிருந்த மக்களுக்கு போதிய வசதிகள் செய்து கொடுக்கப்படாதது குறையாக இருந்தாலும், தமிழக காவல்துறையினரின் கட்டுப்பாடான சேவைமிகவும் பாராட்டக் கூடியதாகும்.

''தமிழகத்தில் கருணாநிதி ஆண்டாலென்ன, எம். ஜி. ஆர். ஆண்டாலென்ன மாநாட்டின் உண்மையான நோக்கம் கைவிடப்பட்டு அவரவர் தமது செல்வாக்கைக் காட்ட எடுக்கும் கலைவிழாக்களாகவே ஆராய்ச்சி மாநாடு மாறிவருகிறது'' என்று தனிநாயகம் அடிகளார் தமது நண்பர்களுக்குக் கூறிய வாக்கு நூற்றுக்கு நூறு உண்மை என்பதை இம்மாநாடு உணர்த்தியுள்ளது.

கேட்டு எழுதியவர்:-

— நாவண்ணன்


## வாழ்த்துகிறோம்

இலங்கையில் தரமான தமிழ் நாடகங்களையும், நடிகர்களையும் உருவாக்கும் நன்நோக்கோடு இயங்கிவரும் நாடக அரங்கக் கல்லூரியின் புதிய நல்முயற்சி

## அரங்கம்

இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை வெளிவரும் நாடகசஞ்சிகை—நற்பணிதொடர, வாசகர்கள் ஆதரவுபெருக வாழ்த்துகின்றோம்

— ஆசிரியர் குழு

# "அரங்கம் ஏட்டின் மழலைப் பேச்சு"

புதிய உலகம் ஆடி — ஆவணி 1980 இதழில் நாடக அரங்கக் கல்லூரியால் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் அரங்கேற்றப்பட்ட ''அவள் ஏன் கலங்குகிறுள்'' நாடகத்தைப்பற்றிய விமர்சனம் வெளிவந்தது வாசகர்கள் அறிந்ததே. இவ்விமர்சனத்தை நாவண்ணன் எழுதியிருந்தார். இந்த விமர்சனத்தினை ஜீரணிக்க முடியாமல்தானே என்னவோ நாடக அரங்கக்கல்லூரியால் வெளியிடப்பட்டுள்ள 'அரங்கம்' நாடக சஞ்சிகையின் முதல் ஏட்டில் (தை—மாசி) நாவண்ணன் நாடக விமர்சனம் செய்யத் தகுதியற்றவர் என்ற கருத்துப்பட எழுதப்பட்டுள்ளது.

'' செல்வி குமுதினி சண்முகலிங்கம், செல்வி இ. ஆனந்தராணி இருவரும் நாடக உலகிற்குப் புதிய கண்மணிகளே ''என்ற நாவண்ணனின் வாசகங்களைச் சுட்டிக்காட்டி '' அனுபவமும், திறமையும், பிரபலமும் வாய்ந்த ஒரு நடிகையை அறிந்துகொள்ள முடியாத ஒருவர் நாடகத்தை விமர்சிக்கும் ஆற்றலை எவ்வாறுபெற்றுர்?'' என்று எழுதியுள்ளது.

ஒரு நடிகையின் பூர்வீகத்தைத் தெரிந்திருப்பதுதான் ஒரு விமர்சகனுக்கு வேண்டிய தகைமைச் சான்று என்று இந்த ஏடு கருதுகிறதா? போகட்டும். கே. பி. சுந்தராம்பாளைப்போல கிழவியாக இல்லாத வரையில் செல்வி இ. ஆனந்தராணிபோன்ற இளைய தலைமுறைகளை 'புதிய கண்மணிகள்' என்று கூறுவதில் என்ன தவறு ?

அதுபோக விமர்சிப்பவர் தனக்குள்ள தகமைச்சான்று இதழ்களையும் சமர்ப்பித்துத்தான் விமர்சிக்கவேண்டும் என்று அரங்கம் கருதுகிறதா? நாவண்ணன் விமர்சனத்துக்குத்தகுதியற்றவர்என்று இவ்வேடு கூறும் பட்சத்தில், இந்நாடகத்தில் சுட்டிக்காட்டப்பட்ட சிறப்புக்களைப் பாராட்டியதும், முன்னர் சிரித்திரன் ஏட்டில் அரங்கக் கல்லூரியின் தயாரிப்பான ''உறவுகள்'' நாடகம் பற்றிச் சிறப்பாக எழுதியதும் கூட நாவண்ணன் அறியாமையால் கூறிவிட்டார் என்று இந்த ஏடுகொள்ளுகின்றதா ?

செல்வி ஆனந்தராணியைச் சிறப்பித்தே விமர்சனத்தில் கூறியிருந்தபோதும் வலுவில்லாத ஒரு காரணத்தைக்காட்டி இந்த ஏடு விமர்சகரை ஏளனம் செய்வதன் நோக்கம் என்ன? நாடக நெறிப்படுத்தல் மற்றும் பல அம்சங்களில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியமையே என்று துலாம்பரமாகத் தெரிகின்றது.

எனவே, நாடக அரங்கப் பயிற்சிக் கல்லூரியின் பாடத் திட்டங்களில் 'நாடக விமர்சனங்களை எப்படிப் பெருந்தன்மையுடன் ஏற்றுக்கொள்வது' என ஒரு பயிற்சியையும் சேர்த்துக்கொண்டால் ஆரோக்கியமான நாடகவளர்ச்சிக்கு உதவியாக இருக்கும்.

பிள்ளை பிறந்தவுடன் அழுவது இயற்கை. அதுபோன்றே அரங்கம் ஏடும் பிறந்தவுடனே அழுதிருக்கின்றது.

**உருவகம்**

# பட்டமளிப்பு!

நத்தார், புதுவருடம், பொங்கல் எதுவானாலும் அவற்றில் உள்ளங்கள் களிப்புற இடம் இருக்கவே இருக்கின்றது!

மனித உள்ளங்கள் மட்டுமா, பொருள் பண்டங்கள்கூட பண்டிகைக்கு பலநாள் முன்னரே புதுப் பொலிவும் மெருகும் பெற்றுக் களிப்புறத் தொடங்குவதைக் காணலாம்!

இதற்கு எடுத்துக்காட்டுத்தான் அதோ அந்தக் காகிதத் துண்டுகள் நள்ளிரவில் துள்ளி மகிழ்ந்து விளையாடும் காட்சி!

"இனி என்ன விளையாடுவோம்?" என்றது ஒன்று.

பட்டமளிப்பு நடத்துவோம்; இந்த மடத்தில் உறங்குகிறூர்களே மனிதர்கள்—இவர்களுக்குப் பெருநாள் பட்டமளிக்க வேண்டும்! மிகச் சரியான பட்டத்தை அளிப்பவருக்குத்தான் வெற்றி! எங்கே பார்ப்போம்!"

"சரி!"

பூரண ஆரோக்கியத்தை எடுத்துக் காட்டியபடி ஒருவன் ஆழ நீள மூச்சுவிட்டு உறங்கிக்கொண்டிருந்தான்.

"இந்த ஆழ்கடலோனுக்குத் தொழிலாளி என்ற உன்னத பட்டத்தை நான் அளிக்கிறேன்" என விளம்பிற்று துள்ளியபடி ஒரு வெள்ளைக் காகிதம்!

"அதே பட்டத்தைத்தான் நானும் நினைத்தேன். ஆனல், இதோ உறங்குகிறுனே அறுபது அடித் தென்னையில் ஏறி இறங்கும் வீரன். இவனுக்கு அப்பட்டத்தை நான் அளிக்கிறேன்" எனச் சவால் விடுத்தது இன்னொன்று!

"இரும்பை அடித்து வளைத்துக் கருவிகள் செய்யும் இந்த இரும்பு மனிதனுக்கே தொழிலாளி என்ற கீர்த்தியும் பெயரும் மிகப்பொருந்தும்" என மிடுக்கோடு எழுந்து கூறிற்று இன்னொரு காகிதம்!

இவ்விதம் போட்டியும் தெரிவும் வளர்ந்தன! இறுதியில் இதுவரை பேசாத இன்னொரு காகிதத் துண்டு பேசிற்று.

"நான் வேறொருவனுக்கு இன்னொரு பட்டத்தை அளிக்கப் பேகிறேன். அதன் பொருத்தச் சிறப்புக்கு முன் எதுவும் நிற்க முடியாது!"

''எங்கே பார்ப்போமே! ''

உயரிய கட்டிலில் படுத்திருந்த இன்னொருவன் கனவு கலையாத நிலையில் எழுப்பப்பட்டான்.

''உனக்குக் கடற்றொழில் தெரியுமா?''

''சீச்சீ''

''மரம் ஏறுவாயா?''

''என்ன நினைத்தீர்கள்?''

''தச்சுவேலை, அல்லது மண்வெட்டி வேலை?''

''அப்படி வளர்ந்தவன் நானல்ல!''

அந்த வெள்ளைக் காகிதங்கள் ஒன்றையொன்று பார்த்து அசந்தன.

''இந்த ஒன்றும் தெரியாத மனிதனுக்கு என்ன பட்டமளிப்போம்?''

''இவனுக்கு ஒரு பெயர் மிக மிகப் பொருந்தும். அதனையே அவனுக்குப் பட்டமாய் அளிக்கப் போகிறேன்''.

''அதுவும் ஏதோ அடைமொழி கொண்ட தொழிலாளி பட்டமா''?

''இல்லை''

''அப்படியானால்?''

''உயர்சாதி என்ற பட்டம்!''

நாக பத்மநாதன்.

## வருந்துகிறோம்

சென்ற இதழில் கொடுக்கப்பட்ட கருத்து மோதல் ''இன்றைய சமய வளர்ச்சிக்கு பயமே காரணம்! பக்தியே காரணம்'' தலைப்புக்குத் தரமான கட்டுரைகள் இரு பக்கங்களில் இருந்தும் வராமையாலும் — எமது அடுத்த இதழ் 'குறிஞ்சிச் சிறப்புமலரா'க வெளிவர இருப்பதாலும் இத் தலைப்புக்குரிய மோதல் கைவிடப்பட்டுள்ளது என்பதை வருத்தத்துடன் அறியத்தருகின்றோம். — ஆசிரியர் குழு

# இவர்களுக்கும் பொங்கலா?

'' தை பிறந்தால் வழி பிறக்கும் '' இது ஒரு முதுமொழி.

'' உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் — மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்வார்'' இது திருவள்ளுவர் அருளியது.

'' ஏர்முனைக்கு நேர் இங்கே எதுவுமேயில்லை
என்றும் நம்ம வாழ்விலே பஞ்சமேயில்லை '' இது தற்காலக் கவிஞரின் பாடல்.

தமிழர் திருநாளாம் பொங்கல் விழாவில் அடிக்கடி பாவிக்கப் பட்ட வார்த்தைகள் இவைகள். பொங்கல் தினத்தில் பத்திரிகைகளை நிரப்பிய ஆசிச் செய்திகளில் மேற்கோள் காட்டப்பட்ட பொன் மொழிகள் இவைகள்.

இந்தப் பொன்மொழிகள் இன்று ஈழம்வாழ் தமிழ்மக்கள் மத்தியில் அர்த்தமுள்ள வார்த்தைகளா? அலங்கார வார்த்தைகளா? சம்பிரதாய வார்த்தைகளா?

'' உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்வோம் '' என்று பாடினான் அன்றைய தமிழன். '' வேலைவங்கிப் படிவத்திற்கும் வெளிநாட்டுத் தொழில் ஏஜன்சிகளுக்கும் வந்தனை செய்வோம் '' என்கிறார் இன்றைய தமிழ் இளைஞர்: '' ஏர்முனை வேண்டாம். வெளிநாட்டில் பீங்கான்கோப்பை கழுவி, என் வயிற்றையும் கழுவினால் போதும் ''என்று வாழ்கிறான் வருங்கால வாலிபன்.

இந்த அவல நிலைக்குக் காரண கர்த்தா யார்? தரப்படுத்தலினால் தரைப்படுத்தப்பட்ட வாலிபன் உப உணவு உற்பத்தியில் ஈடுபட்டான். காடுகளை அழித்து விவசாயம்செய்தான். மிளகாய் வெங்காயம் அறுவடை செய்யும்பொழுது வெளிநாட்டிலிருந்து நம் துறைமுகத்துக்கு அதே பொருட்களுடன் கப்பல்களும் வந்துவிடும்.

விடுதலையைக் கேட்கும் தமிழ் மக்கள் இவ்வாலிபர்களை ஆதரித்தார்களா? பணமுள்ள முதலாளி அறுவடையாகும் இடத்திற்கு லொறியுடன் சென்று விலையை நிர்ணயித்தான், பதுக்கல் வளர்ந்தது. நிலத்தின் ஏகபோக ஆதிக்கம் வசதிபடைத்தவர் ஒருசிலர் கையில் தஞ்சமடைந்தது. தமிழ் தொழிலாளி மாடாக உழைத்தவன். மாட்டிலும் கேவலமாக நடத்தப்பட்டான். மாட்டுக்குப் பொங்கினான் முதலாளி. ஆனால். தொழிலாளிக்கு பொங்கலுக்கு முற்பணமும் இல்லை. நசுக்கப்பட்டான் தொழிலாளி.

சுரண்டல் மலிந்தது. எல்லோரும் சுரண்டப்பட்டார்கள். '' உழைப்பவன் தேகமெல்லாம் சேறும் சகதியும்; உண்டுகொழுப்

பவன் தேகமெல்லாம் குங்கும மும் சந்தனமும்.'' அண்ணுவின் கூற்று ஈழத்தில் வாழ்ந்து காட்டப்படுகிறது.

விடுதலைத் தாகமுற்ற மக்கள் உள்ளூர் உற்பத்திகளை ஆதரித்தார்களா? இந்நிலையில் ஏர்முனையை நாடுவார் யார்?

நிலத்தின் ஏகபோக ஆதிக்கம் ஏர்முனைகளைவிட்டு உழவு இயந்திரங்களை நாடியது. இந்த நவீன இயந்திரங்கள் மனிதனுடைய இயற்கை வாழ்விற்கு — அவனுடைய கூட்டுறவு வாழ்வுக்கு அதிர் வேட்டாக அமைந்தன.

முன்னைய காலத்தில் இரண்டு ஏக்கர் நிலம்கொண்ட சில விவசாயிகள்ஒன்றுகக்கூடிநாட்குறித்து எல்லோரும் ஒவ்வொரு வயலாக உழுது வந்தார்கள், கூட்டுறவு வளர்ந்தது.

காளைகளின் இயற்கை உரத்தைப் பாவித்தான். பயிர் செழித்தது. அத்துடன் அவன் வாழ்வும் பொலிந்தது.

இன்று நிலை முற்றுக மாறிவிட்டது. இயந்திரக் கலப்பை வசதி படைத்தவன் கையில் சென்றது, சுயநலம் வளர்ந்தது. இயந்திரச் சொந்தக்காரன் கூலியை நிர்ணயித்தான். விவசாயி பரம ஏழையானுன். தன்வயல்களைஈடுபிடித்து ஈற்றில் அவற்றை விற்கவேண்டிய துர்ப்பாக்கியநிலைக்குத் தள்ளப்பட்டான்.

செயற்கை உரப்பாவனை ஆரம்பமாகியது. வாழ்வுதந்த மாடுகளை விற்றுன். புட்டிப்பாலை குடித்தான். செயற்கை உரத்தினுல் நிலத்தின் தன்மை மாறியது. தண்ணீர் தன் சுவையை இழந்தது. இத்தண்ணீரின் நச்சுத்தன்மை காரணமாக வருங்காலத்தில் பிறக்கவிருக்கும் குழந்தைகள் அங்கவீனர்களாகப் பிறக்கக்கூடும் என்கிறுர்கள் ஆராய்ச்சியாளர். இவையனைத்தும் செயற்கைமுறை நமக்குத் தேடித்தந்த பரிசு.

இன்று அமெரிக்காவில் மாதம் ஐம்பதினுயிரம் மக்கள் இயற்கை வாழ்வுக்குத் திரும்பிக்கொண்டிருக்கிறுர்கள் என்பது புள்ளிவிபரம் தரும் உண்மை. மின்சார அடுப்பைவிட்டு விறகை நாடுகிறுர்களாம் அமெரிக்க மக்கள்.

ஆண்டுதோறும் மதம் கடந்த நிலையில் கொண்டாடப்படும் உழவர் விழா—தமிழர் தேசிய விழா—பொங்கல் விழா பானைப்பொங்கலோடு முடிந்துவிடக் கூடாது. நம்முடைய உள்ளங்கள் பொங்க வேண்டும், நமது சிந்தனைகள் பொங்க வேண்டும்,

ஏர் பிடிப்பவர்கள் வாழக்கூடிய சூழ்நிலையை நம் சமுதாயம் உருவாக்க வேண்டும். ''தை பிறந்தால் வழி பிறக்கும்''என்று மந்திரம்ஓதி வாழாவிருப்பதை நிறுத்தி வழிபிறக்க நாம் ஆவனசெய்ய வேண்டும்.

சிந்தித்தால், செயற்பட்டால் உழவர் விழா அர்த்தமுள்ள விழாவாகும். உழவனும் வாழ்வான் நாடும் வாழும்.

அருட்திரு சிங்கராயர், O. M. I.

# புதுமைப் பதில்

சி. ஸ்ரனிஸ்லாஸ்
அடம்பன்

**மனித உறவுகள் முறிவதற்கு மதங்களும் ஒருவகையில் காரணமாக அமைகின்றன என்பது எனது தாழ்மையான எண்ணம். உங்கள் கருத்து என்னமோ?**

முறிந்த உறவுகளை முழுமை பெற வழி வகுப்பதுதான் மதங்கள் என்பது என்னுடைய கருத்து வரலாற்று உண்மையும் கூட.

லீனஸ் சொய்சா
பண்டாரவளை

**வாழ்க்கையின் அர்த்தமென்ன ?**

வாழ்க்கை வாழ்வதற்கே, அதை நிறைவாக வாழ்வதற்கே.

எஸ் புஸ்பராணி அந்திரேஸ் முதலியார்
பரந்தன

**புதுப் பானையுட் பொங்கப்படும் புதுச்சோறு சமீபாடடைவது பழைய வயிற்றறையில். இது எதனைக் குறிக்கிறது.**

பழமை இருந்தால் தானே புதுமைக்குச் சிறப்பு.

**கத்தோலிச்கருக்கும் பொங்கலுக்கும் உள்ள தொடர்பு என்ன?**

கத்தோலிக்கன் தமிழனாய் இருக்க முடியாதா? அறுவடை நன்றி விழாவில் தமிழ்க் கத்தோலிக்கன் பங்கெடுக்காமல் இருப்பது ஒரு பெருங் குறையே.

சி. க. ஜீவராணி புனீதா
வ, புதுகுடியிருப்பு

**ஒரு பங்கில் ஒருவர் செய்யும் சேவையைப் பற்றி விமர்சிப்பவர்கள்பற்றி தங்கள் கருத்து என்ன? அவர்களை எவ்வாறு அழைப்பது? அவர்களுக்கு என்ன அறிவுரை கூறுவது?**

நல்லது. பாராட்ட வேண்டியது. அவர்கள் பெயர் விமர்சகர், விமர்சனம் தீமையை விதைக்கும் போது பாதிப்பு ஏற்படுகிறது.

அ. எட்வேட் பங்கிராஸ்
புதுக்குடியிருப்பு

**பூசைப் பலியில் பிரசங்கம் செய்யும்போது அரசியல் விடயங்களைக் கூடுதலாகப் பயன்**

**படுத்தும் திருச்சபைக் குருமார் பற்றிய தங்கள் அபிப்பிராயம் என்ன?**

அநீதியைக் கண்டித்து இறைவாக்கை வழங்கும்போது அது அரசியல் அல்ல. வேட்பாளராக வாக்குகள் கேட்டால் குருக்களுக்கு ''வோட்'' போடாதீர்.

விக்ரர் அலெக்ஸ்

**புதிய உலகே புதுமைமிக்க புதிய ஆண்டில் நீ புதிதாக மேற்கொண்டிருக்கும் புதிய அம்சம் யாதோ?**

அவசரம் என்ன? எதிர்பார்க்கவும்.

செ. சிங்கரீசா
மிருசுவில்

**வண்டி உருண்டோட அச்சாணி எவ்வளவு முக்கியமோ அதேபோல மனிதன் தனது வாழ்வை இன்புற அமைக்க எது அவசியம்?**

இன்னும் உணரவில்லையா? ஆழமான கடவுள் நம்பிக்கை வேணும்.


# நேத்திரம்

தொடர்புச் சாதனங்களின் வழி இன இசைவுக்கான
அவையின் செய்திக் கடிதம்

சிங்கள, தமிழ், ஆங்கில பத்திரிகைகள் செய்திகளைத்
திரித்தும், மாற்றியும், தவறாகவும் வெளியிட்டு
இன ஒற்றுமைக்கு ஊறுவிளைவிக்கும் செயல்களை
இலங்கைவாழ் எல்லா மக்களுக்கும் எடுத்தியம்பி
சமூக ஒற்றுமைக்கு வழிகோலும் ஏடு
தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய
மூன்று மொழிகளிலும் வெளிவருகின்றது.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
தொடர்புச் சாதனங்கள் வழி
இன இசைவுக்கான அவை, த. பெ. இல. 601,
கொழும்பு.

# உங்கள் பார்வை

வ. கலாவதி.
குருக்கள் மடம்.

சத்தியத்தின் சவால் சிறு கதையை எழுதி, பெண்களுக்குப் படிப்பினைஊட்டிய உரும்பையூர் ஞா. வி. ஜெகநாதனுக்கு எனது பாராட்டுக்கள்.

* *

விக்ரர்–குமார்,
நாரந்தனை.

புதுமை பரப்பு புதிய உலகே
புத்தாண்டில் காலடி
வைக்கும் — நீ
புதுமை ஒளிகள் பல ஏற்றி
புத்தொளி வீசிடு வாயே

* *

ஞ. அன்ரனிப்பிள்ளை,
அடம்பன்.

சென்ற ஆண்டுகளில் ஆற்றிய சேவையை, புதிய உலகம் தொடர்ந்து, புதிய ஆண்டிலும் அறிவான ஆக்கங்களை அளிப்பதன் மூலம் ஆற்ற வேண்டும். ''ஒளி பிறக்குமா'' கட்டுரையை எழுதிய பேனார்ட் அண்ணாவுக்கு எனது பாராட்டுகள்.

* *

எட்வேட் பங்கிராஸ்,
புதுக்குடியிருப்பு.

எல்லாவற்றையும் சிறப்பாகவும், ஒழுங்காகவும் செய்துவரும் புதிய உலகம், புரட்டாசி — ஐம்பசி இதழின் அட்டைப்பட விளக்கத்தைக் கார்த்திகை — மார்கழி இதழில் வெளியிடாதது மல்லாமல் அதற்கான காரணத்தை அறிவிக்காமல் விட்டதும் வருத்தத்துக்குரியதாகும். ''புதிய உலகத்துக்கு இதுவும் ஒகு பாஷன் போலும்.''

* *

என். பாக்கியராஜா,
கன்னாட்டி.

நாவண்ணன் அவர்கள் ''அம்மா பசிக்குதே'' எனும் தொடர் நாடகம் மூலம் நாட்டின் இழிநிலையை எடுத்து இயம்பியமைக்கு என் பாராட்டுகள். ஏமாற்றம் என்னும் தொழுநோய் இனியும் ஏழை மனதுகளில் புரையோட விடாமல் தொடர்ந்து உணர வையுங்கள்.

* *

சிறி,
உரும்பராய்.

இப்புதிய ஆண்டில், புதிய உலகத்தின் சேவையின் ஆக்கங்களை அறியாதவர்களும் புதிய உலகத்தை அறிந்து புதிய பாதையிலே செல்வதற்கு வாழ்த்துகின்றேன்.

* *

எஸ். எஸ். தேவா,
வங்காலை.

புதிய உலகமே, நீ கார்த்திகை —மார்கழி இதழில் வெளியிட்ட

'' சத்தியத்தின் சவால் '' சிறு கதை நன்ருக இருந்தது. அது ..., நீ இலங்கை ஒலிபரப்புக் கூட்...டான நாடகங்களில் கொச்...த் தமிழ் பேசுகின்ருர்கள் என்று தாக்கினுய். ஆனுல், '' சத்தியத்தின் சவால் '' சிறு கதையைக் கொச்சைத் தமிழில் வெளியிட்டதன் காரணம் என்ன? இதற்கான விடையை நீ தருவாயா ?

'சத்தியத்தின் சவால்' கதையில் இடம் பெற்றது இன்றும் பேச்சு வழக்கில் உள்ள கிராமியத் தமிழ். ஆனுல், வானெலியில் இதே பேச்சு வழக்குத் தமிழுக்குத் தேவையற்ற ஓசைகள், இழுப்புகள், நெளிப்புகளையே நாம் கண்டித்திருந்தோம். ஆ—ர்.

* *

ப. அன்னசாந்தி,
நாஞட்டான்.

உரும்பையூர், ஞா. வி. ஜெகநாதன் எழுதிய சத்தியத்தின் சவால் என்ற சிறு கதை மிகவும் சிறப்பாக இருந்தது. சீதனம் கேட்கும் ஆண்களின் நெஞ்சம் கல்போன்ற நெஞ்சம். ஜெகநாதனுக்கு எனது பாராட்டுகள்.

* *

செ. சிங்கராஜா,
மிருசுவில்.

அருட்திரு, எஸ். ஈ. என். குணசீலன் அடிகளார் குடிகாரருக்கு நல்ல அறிவுரைகள் கொடுத்துள்ளார். குடிப்பழக்கத்தால் எவ்வளவு தீமைகள் நாட்டிலே, வீட்டிலே ஏற்படுகின்றனவென்று அடிகளார் அலசி ஆராய்கின்ருர். நாமும் அடிகளாரின் ஆராய்ச்சியிலே பங்குகொண்டு குடிப்பழக்கத்தைக் கைவிட்டால் நாடும் முன்னேறும், நாமும் முன்னேறுவோம்.

* *

உயிலூர், ஏ. பீற்றர்ராஜன்,
உயிலங்குளம்.

கதைகள் பேசியும் கவிதைகள் பாடியும்
கருத்தில் மோதியும் புதுமைப் பதில்கள் கூறியும்
விளக்கமளித்தும் விமர்சனம் செய்தும்
உங்கள் பார்வையிலும் மலர்ந்தன மலர்கள்
புலருமாண்டிலே புதுமணம் பரப்ப
புதிய உலகிற்கு என் வாழ்த்து

* *

ஆர். எஸ். செல்வரத்தினம்,
அல்வாய்

கரவையூர்ச் செல்வம் அவர்களின் '' அமெரிக்க அனுபவங்கள் '' இடம் பெருமை பெருங்குறையாகவே இருந்தது. என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டதும், செல்வம் அவர்களின் பயணக்கட்டுரை இடம் பெருத குறையை நீக்கியதுமான அம்சம் எதுவென என்னைக் கேட்டால், '' அம்மா பசிக்குதே '' நாடகம் என்பேன்.

நகைச் சுவையும் நையாண்டிச் சுவையும் ஒருங்கே வழங்கும் அதே வேளை நாட்டு நடப்பை நலமுடன் நவில்கின்ற இவ்வரிய படைப்புக்கு எனது பாராட்டுகள். கருத்து மோதல் பகுதிக்கு அறிவியல் (விஞ்ஞானம்) தொடர்பான ஒரு தலைப்பை ஒரு முறையாவது வழங்கஏற்பாடுசெய்யவும்.

## புதிய உலகம்

# "குறிஞ்சிச் சிறப்பு மலர்"

## வெளியீட்டு விழா

## 25-4-81

சனிக்கிழமை

இடம்:

## பதுளை, சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம்

வெளியீட்டு விழாவைத் தொடர்ந்து

- ❋ சொற்பொழிவுகள்
- ❋ கவியரங்கம்
- ❋ கலை நிகழ்ச்சிகள்

இடம்பெறும்

"புதிய உலகம்" அபிமானிகள், வாசகர்கள், சந்தாதாரர்கள், எழுத்தாளர்கள் அனைவரையும் திரண்டுவந்து விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அழைக்கின்றோம்.

விபரங்களுக்கு:

செயலாளர்,
'புதிய உலகம்', வாசகர் வட்டம்,
ஊவா எழுத்தாளர் ஒன்றியம்,
பதுளை.

புனிதவளன் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம்.